
339

# தமிழகம்



# ORIGINAL KAMALA DIAMONDS
## AND
# KRISHNA, SPECIAL DIAMONDS



**A. KRISNAN.**

நீடித்திருப்பதும், ஜொலிப்பில் சிறந்ததுமான.
ஒரிஜினல் கமலா அண்டு கிருஷ்ணா
வைரங்களையே உபயோகியுங்கள்

1. மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
2. வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப் படும்.
3. *V. P. P.* ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக் கப்படும்.

உரிமையாளர் **A. கிருஷ்ணன்,**

**கமலா அண்டு கிருஷ்ணா ஸ்பெஷல்**
**டைமண்டு**

**29,** சின்னகம்மாளத்தெரு, திருச்சினாப்பள்ளி.

*N. B.* விலை விவரங்களுக்கு கேட்லாக் இனாம்.

# தமிழகம்

ஆசிரியர் : எஸ். எம். சஞ்சீவிராஜு

போர் 1 | திருச்சி. 1—6—47 | வெற்றி 1

## இத்திங்களில்

1. வாலை நீட்டாதே! (கார்ட்டூன்)
2. நமது நோக்கம் (தலையங்கம்)
3. நாட்டுப்பிரிவினையில் அப்பாவித்தனங்கள்.
4 வாழ்க கலை மன்னர்கள்
5. தமிழன் வேண்டுவேது ?
6. எதிரொலி (கவிதை)
7. ஆலயப்பிரவேசமா ? அல்லது அடிமையாக்கும் சூழ்ச்சியா ?
8. இல்லாத சாமி துணை.
9. விசித்திர ராமாயணம்.
10. புரட்சி ஓங்கவேண்டும் (கவிதை)
11. பக்தியும்—முக்தியும்
12. சலிமா (தொடர் கதை)
13. வேலைக்காரி (விமர்சனம்)

அடுத்த இதழில் அறிஞர் அண்ணாவின்—
.....................? எதிர்பாருங்கள்.

கதைகள் யாவும் கற்பனையே.

விசித்திர ராமாயணத்தின் தொடர்ச்சி 29-ம் பக்கம் பார்க்க.

**விலை அணா நான்கு**

தந்தி : பியூஜி

## ரெங்கூன் வைரங்கள்



சகல வகைகளிலும் சிறந்த எமது

### ஒரிஜினல்

# பியூஜி வைரங்கள்

ஆதரியுங்கள்

## பியூஜி டைமண்ட் கம்பெனி

பெரிய பஜார், திருச்சி.

*Prop* : S. கோவிந்தராஜுலு நாயுடு
V. வீராசாமி நாயுடு
R. ஏழுமலைப் பிள்ளை

கியாரண்டியுள்ள பவுனில் தயார் செய்யப்பட்ட
தொங்கட்டான், தோடு, கடுக்கன், பேசரி
இன்னும் கல் பதித்த புதுமாதிரியான
நகைகள் எங்களிடம் கிடைக்கும்

# வாலைநீட்டாதே!



# நமது நோக்கம்.

---o---

நாம் திராவிடர்கள், இதைக் கூறுவது நமது குரலும், பொறிப்பது நமது எழுதுகோலுமட்டுமல்ல! இன்று சரித்திரத்தின் வாயிலாக அறிவும் திருவுமிளிர இமயமுதல் வேங்கடம் வரை நிலவியிருந்த திராவிட நாட்டு எல்லைக் கோட்டை இன்றைக்குப் பன்னூறு ஆண்டுகளுக்குமுன் அவ்வப்போது தோன்றி மறைந்த முன்னேற்றக் கருத்துக் கொண்ட அறிஞர்கள் வகுத்துவிட்டுப்போன நூல்களில் தோண்டி யெடுக்கப்பட்ட பல சின்னங்களில், வீரமும், எழிலும், கொடையும் சிறந்த நம் பண்டைத் திராவிடரின் பண்பாட்டை விளக்குவதாக இருத்தலின், அவர்களின் வழி வந்த நாம் அறியாமையில் ஆழ்ந்து; அல்லலிலே நமது திறமையெல்லாமிழந்து, ஆரியத்தின் அடிபணிகின்ற நிலைமை, இன்னும் நாட்டிலே நிலவி மக்களின் அறிவைச் சுரண்டுகின்ற அர்த்தமற்ற மந்திர தந்திரங்களை ஒழித்து அரசியல், அறிவியல், சமூகப் பொருளாதாரத் துறைகளில், திராவிடநாட்டு மக்களாகிய நாம்; அணுவணுவாக ஏற்றத்தாழ்வுகளை அலசி மக்களுடைய முன்னேற்றங் கருதி எத்தகைய இழிவு ஒழிப்புப்போராட்டத்திற்கும் நமது அறிவு; ஆற்றல், ஆண்மை இவைகளைத் தக்கவாறு உபயோகித்து, மூடபக்தியென்னும் தொத்து நோயை விரட்டுவதற்கு நாம் ஒவ்வொருவரும் வைத்தியர்களாக மாறுவது மட்டுமின்றி, சீர்திருத்தவாதியெனும் ரண வைத்தியர்களாகவுமாற வேண்டுமென்பதே நமது நோக்கம்.

துடியிடையாரைப்பற்றி வர்ணிக்கப்படுவதெல்லாம் வெறும் ஆபாசக்களஞ்சியமாகவும், அழகைப் பருகி சிதைக்க எண்ணும் காமத்திருவிளையாடற் படலமாகவுமே, கற்பனைக் காவியங்களில் தோற்றும் நிலை ஒழிக்கப்படவேண்டும். பண்டை திராவிட வீர மாதரைப்பற்றிய வெற்றியைப் பா

ராட்டி; இன்று நம்நாட்டு சகோதரிகளுக்கு அவர்களுடைய வழியைப் பின்பற்றும்படியான சூழ் நிலைகளை தடுக்கும், எந்த கலையானாலும், எந்த தெய்வமானாலும், அவைகளைத் தவிடுபொடியாக்கி, அறிவு அயல்நாட்டிலே ஆக்கித்தந்த அணுக்குண்டின் அழிப்புசக்தியைப்போல் நமது திராவிடத் தடத்தோளால், நீண்ட வன்மை பொருந்திய கரத்தால், அல்லது வாள் வேண்டப்படாத இந்நாளில் சிந்தனையால் மக்கள் எழுச்சிபெறச் செய்யும் நமது உள்ளத்தின் உணர் வினை ஏட்டிலே பொறித்து, அவர்களுடைய வீழ்ச்சிபெற்ற உள்ளத்தில், சிதறிச் சிதைந்த வாழ்க்கையில் உயர்வு பெறு மாறு அவர்களுடைய இதயத்திலே நமது எண்ணத்தை பொறிப்பதே! நமது குறிக்கோளாகும்.

கக்கும் விஷப்பாம்பையும், கனல்போல் சுடும் விடப் பூச்சிகளையும், இன்ன பிற ஆராய்ச்சி முறைக்குப் பயன் படக்கூடிய திராவகங்களையும், தொடுதல் அவசியமில்லை தான். ஆனால் நமது திராவிடநாட்டு மக்களை தமது உழைப்பின் மாறுபட்ட தன்மையால், உயிரை பிழியும் வறுமையால், சேரிகளிலே வாழுகின்ற தாழ்த்தப்பட்ட மக்களை, மதமென்ற பெயரால் சுரண்டிக் கொழுத்த பாத கர்கள்; அவர்களுடைய உரிமையையும் சுரண்டி அவர்களைத் தீண்டப்படாதவர்களாக ஆக்கிவிட்ட இழி நிலையை அழித் தொழித்து, கல்வி, நாகரீகம், பகுத்தறிவுத், தன்மை இவை களை அடையும்படியான கிளர்ச்சியில் நாமும் உதவி செய்ய நினைவு. நேரம், நர்த்தனமாடுகின்ற எழுதுகோல், இவை களை அவர்களுக்கென்று, தனியாக இரவு பகல் பாராது, அதனதன் விளைவுகளைச் சிலவழித்து, அவர்களுடைய தன்மை, தவிப்பு, இவைகளைப் போக்க முயற்சிப்பதே! நமது நோக்கங்களிலெல்லாம் தலைசிறந்ததாகும்.

நமது நாட்டுச் செல்வங்களைச் சுரண்டும் ஆரிய, ஆங்கி லேய பணியாக்களை அவர்களுடைய குறிக்கோளில் வெற்றி பெறுமல் திருப்பி திணரடித்து, மக்களாட்சி நல்கும் திரா

விடநாட்டுப் பிரிவினைக்கு, நாம் மொழியிலே, மதத்திலே கிளர்ச்சி செய்து, வளமையான விளை நிலங்களில் வாடுகின்ற விவசாயி மக்களையும், ஆலையிலே உழைத்து அரை வயிருன, ஆதரவற்ற பாட்டாளி மக்களையும், ஒன்ருக இணைத்து, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து, அல்லல் அகன்ற வாழ்வினை தந்து, ஆவன செய்வதே நமது நோக்க மாகும்.

நமதுநோக்கமும், திட்டமும், இவைபன்றி வேறல்ல. இவைகளிலெல்லாம் தமிழகம் தயங்காது பணிபுரிய அன்பர்களின் ஆதரவை வேண்டுகிறது.

வணக்கம்

---

# "வாழ்க கலைமன்னர்கள்"

—o—

தமிழ்க் கலை வளர்ப்பில் பேரார்வம்கொண்ட இரு நடிக மன்னர்கள் இரண்டரை ஆண்டுகள் தங்களின் திறமைக்கு, இருட்டடிப்பு ஏற்படுத்திய கால மாற்றத்தைக் கடந்து விடுதலை எய்திய அவரகள் மீண்டும் தமது ஆற்றலால் பாமரர், பாவலர், நாவலர் ஈருக பயனடையும் செயலினை நாட்டிற்கு புரிகுபவர் என்ற பெருநோக்கோடு தமிழகத்தின் சார்பாக வ ழ் த் து கி ன் ரோ ம்!

# நாட்டுப்பிரிவினையில் அப்பவித்தனங்கள் !

நாட்டுப்பிரிவினை எந்தெந்த அமைப்பைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதைக்குறித்து பலபத்திரிகைகள் பலவாருக எழுதி வருவதை நாம் காண்கிறோம். நமது அபிப்பிராயத்தில் கலை, மொழி, நாகரீகம் என்ற கருத்துக்களை ஒட்டியே பிரிக்கப்படும் தமிழகத்தைத்தான் மக்களுடைய எதிர்கால நல்லமைப்பிற்குகந்தமெனக் கூறுகிறோம்.

இதில் பூசல்கள் பலவிதத்திலே, பல திருப்பங்களிலே வந்து வந்து ஒரே குறிக்கோள் கொண்டு இன்றுவரை மக்களுக்காக உழைத்துவரும் ஒரு பிரிவினர், மற்றொரு பிரிவினரை தாக்கிக்கொள்வது வேடிக்கையான செய்திகூட அல்ல வேதனையான செய்தியும்கூட.

எமது குறிக்கோள் 40 கோடி மக்களுடைய விடுதலை என்று ஓயாமல் வாய் சலியாமல் உளறிக்கொண்டு சுயநலமும் சுரண்டும் மனப்பாங்கும் கொண்டு, பிற கட்சியினரை வாட்டி வதைக்கும் தன்மையை அறிவுள்ள மக்கள் ஆராயும்பொழுது அறிவு, பொருள், ஆக்கத்திறமைகள் குன்றி அல்லுறுவது காணச் சகியாமல், நமது இழந்த நாட்டெல்லையில் மீண்டும் மாற்ருரின் ஏமாற்று, பணச்சுரண்டல் இவைகளைத் தடுத்து தமிழக மக்கள் எல்லா உய்யும் தொழிலிலும் சிறப்புற்று விளங்கும் வகைக்கு என்னவழி என்ருல், திட்டமாகக் கூறுகிறோம், நாடு பிரிக்கப்படவேண்டும், தமிழகம் நமது என்று பெருமையோடு கூறிக்கொள்ளும் நாள் நெருங்கிவிட்டது. அதைக் கருதாமல் தாய்நாடு, தமிழ்நாடு என்று போட்டிகளைப் புகுத்தி எழுத்துத் திறமையை எடுத்துக்காட்டுவாதல் எதிர்கால மக்களுக்கு அநாகரீகமான இருண்ட உலக வாழ்வைத்தான் காட்டுகிறோமென்பதை அறிஞர்கள் ஏன் தெரிந்துகொள்வதில்லை ?

குறிகிய நோக்கோடு தமிழ்நாடு கிடைத்துவிட்டால் போதும், திராவிட நாடு எதற்கு ? தெலுங்கர், கேரளர்,

கன்னடியர் இன்னபிற மக்கள் திராவிடநாட்டுக் கிளர்ச்சியில் ஈடுபட்டவரை ஆதரிக்கமாட்டார்களே! என்று ஐயப்பாடு எழுவதைப்பற்றி ஒரு முடிவிற்கு வருவோம். மக்களுக்காக உழைக்க முன்வந்த எவர்க்கும் விரிவுபெற்ற சிந்தனை விளக்கம் பெறவேண்டும். அப்பொழுதுதான் அவர்களை மக்கள் சந்தேக மற்ற பார்வையிலே காணுவர். மேலும் அவர்களுடைய முழு ஆதரவு, ஆர்வம் இவைகளை அளிக்கத் தயங்கமாட்டார்கள். உரிமை உள்ளதைத்தான் வேண்டுகிறோம் என்றால் அதைத் தடுக்க எவர்க்கும் உரிமையில்லை. அதன் அடிப்படையிலே எழுந்ததுதான் திராவிடநாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி. இதை துவங்கும்முகத்தான் நாட்டு மக்களுடைய உள்ளத்தில் ஊறிப் போன பழைய மோகத்தைக்களைந்து பகுத்தறிவுப்பாதைக்கு அழைத்துச்சென்று எவ்வளவோ எதிர்ப்பு, பூசல், ஏக்கம், ஏமாற்றம் இவைகளைக் கடந்துவந்து அறிவுப்பூங்காவாக நாட்டைத் திருத்தி அமைத்தபிறகு, உறங்கிக்கிடந்தவரெலாம் ஊக்கம்பெற்று, திராவிட நாடா? முடியுமா? முயன்றாலும் கிட்டுமா? என்னய்யா அவர்கள் சும்மா இருப்பார்களா? என்று சந்தையிலே, சந்தியிலே சனக்கூட்டத்திலே கூடுமானால் மேடையிலே கூக்குரல் போட்டு பெரிய கிளர்ச்சியை, அதாவது தமிழ்நாட்டைத்தான் நாங்கள் வேண்டுகிறோம். அதற்காக எந்த தியாகமும் செய்யத்தயார் என்று பறை சாற்றுவது முறையா? அல்லது சரியா! என்று கேட்கிறோம். இதனால் தமிழ்நாடு வேண்டுவது, பெறுவது நீதியல்ல என்று சொல்லவில்லை. தமிழ்நாடு வேண்டும். ஆனால் இந்த கூக்குரல் திராவிட நாட்டுக் கிளர்ச்சி ஊட்டிய மனோதைரியத்தால் எழுந்ததுதானே! திராவிடநாடு வேண்டுவதில் என்ன தவறு?

தமிழர்மட்டும் வாழ்ந்தால் போதுமா? கன்னடர், கேரளர், ஆந்திரர் இவர்களுடைய வாழ்வென்னவாவது? இவர்களனைவரையும்தான் திராவிடர் என்று கூறுகிறோம். இதையெவரும் மறுக்கவோ, மறக்கவோ இயலாது?

இமயமுதல் குமரிவரை பரவிக்கிடந்த நாட்டை ஆண்ட பண்டை உரிமையைப் பெற எவரெவர் கிளர்ச்சி செய்கின்

றனரோ அவரவர்க்கெல்லாம் அவர்களுடைய உரிமையான பிரிவினையை கொடுப்பதில் தவறொன்றுமில்லை. ஆனால் திராவிட நாட்டை வேண்டுகின்ற நாம், ஆட்சி முறையில் எப்படியிருந்தாலும் ஐக்ய முறையில் ஒன்றாக இருப்பதற்கே முயல்கிறோம் ஆயினும் ஏகாதிபத்யம் செலுத்துவதற்காக அல்ல.

இன்று நடுவீதியிலே அலையும் நமக்கு நாடு கிடைக்கிறதென்றால் வேண்டாமென்று ஒதுக்கிவிட முடியுமா? பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் சேரன், சோழன், பாண்டியன் பவனி வந்து மக்களுக்குக் குந்தகம் நேராமல் ஆண்டுவந்த இந்நாட்டிலே ஆங்கில, ஆரிய, பனியாக்கள் பவனிவந்து மக்களுடைய உழைப்பு, உள்ளம், உவகை இவைகளை சிதைப்பதை அடியோடு வெறுத்துத் தள்ளுவதற்காக நாட்டுப்பிரிவினை வேண்டுகிறோம். ஆந்திரர், கன்னடியர், கேரளர் நம்மோடு ஒன்றுபட்டு திராவிட சமஷ்டியை விழையாராயின், நாமும் அவர்களை ஒதுக்கி ஆங்கில, ஆரிய, பனியா முதலிய கொடுங்கோலர்களின் எவ்விதத் தொடர்பில்லாமல் தமிழகத்தை ஆள்வதற்கு இயற்கை வசதிகள் நிறைந்திருப்பதை நினைப்பூட்டுகிறோம்.

வஞ்சனை, ஏமாற்று நிறைந்த புராணப் புதர்களை அகற்றி மேடுபள்ளம் சிதைத்து, கள்ளிச்செடி, சப்பாத்தி இவைகளை சிதைத்து, பூந்தோட்டம் அமைக்கப்பட்டபின் மலர் கொய்ய வரும் சோம்பேறிகளைப்போல, அதுவும் மல்லிகைபோதும். மனோரஞ்சிதம் வேண்டாம். சண்பகம் போதும், ரோஜா வேண்டாம் என்று கூறுபவர்களது கூற்று சிரிக்கமட்டும் செய்வதாக அல்ல, சிந்தனையும் அவர்களுடைய அப்பாவித்தனத்திற்காக செய்யவேண்டியிருக்கிறதே! என்று நினைக்கவேண்டியிருக்கிறது.


"தமிழகம்" வருட சந்தா ரூ. 3—8—0

விபரங்களுக்கு :

நிர்வாகி :

**தமிழகம் பிரசுராலயம்**

தெப்பகுளம் — திருச்சி.

# தமிழன் வென்றவது.

(தி. கு. மாணிக்கம்)

—:o:—

தேனீ! நீ வண்ணமலர் வனிதையரின் வஞ்சக வலையில் வீழ்ந்து வதைகிறாய். அவள் தன் செவ்விதழ்களை அசைத்து உன்னை வசீகரிக்கின்றாள். தன் மனோரம்மியமான மணத்தினால் உன்னை அவள் ஆட்கொண்டுவிடுகிறாள். அவளின் இதழ் பருக அவளைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு அலைந்து திரியும் போது, சிற்சில சமயங்களில் அவளது மென்மையான உடலில் உன் திருக்கரம் படச்செய்து, காதல் விளையாட்டால் அவளை வயப்படுத்திவிடுகிறாய். உணர்ச்சியினால் உந்தப்பட்ட அவள் உவப்புடன் அழைக்கிறாள் உன்னை அவளின் அளவிலா அன்புக்கு, அடக்கமுடியா ஆசைக்கு, ஆளான நீ, அன்னாளின் செவ்விதழில் செறிந்திருக்கும் தேன் பருகி உன்னைமட்டுமின்றி உலகையும் மறந்து மயங்கி உறங்கிவிடுகிறாய். உன்னை வீழ்த்த யாரேனும் வந்தாலும் தெரிவதில்லை உனக்கு.

நீ எவ்வளவோ கஷ்டப்பட்டு—அரும்பாடுபட்டு – உன் காதலியைத் தேடி அவளைக் கெஞ்சி, கொஞ்சி, வேண்டி தேன் கொண்டுபோய் சேமித்து வைக்கிறாய் உன் புதிய வீட்டில்-புதிதாய்க் கட்டிய கூட்டில். எதிர்கால வாழ்க்கைக்கு சேகரிக்கப்பட்ட உன் சொத்து களவாடப்படுகின்றது. நீ இழந்து நிற்கிறாய் இருப்பதை எல்லாம்! உன்னைப்போல்தான் இன்று தமிழனும் ஆகிவிட்டான்! ஆரிய மங்கையின் வஞ்சக வலையில் வீழ்ந்து அல்லல்படுகிறான். ஆரிய மது உண்டு மயங்கி அறிவையும் ஆண்மையும் இழந்து, வீரமும் விவேகமும் குன்றி, தன் முயற்சியில் சிறிதளவும் நம்பிக்கையின்றி, தளர்ந்துவிட்டான். "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி, மெய்வருந்தக் கூலிதரும்" என்ற தமிழ்ப் பண்பை மறந்துவிட்டான்.

வெயில் குளிர் கவனியாது, சுகதுக்கம் நினையாமல், இரவு பகல் பாராது, உழைத்து உழைத்து அதனால் வரும் ஊதியத்

தைக்கொண்டு சிறிது உண்டு சேமித்து வைத்தாலும், ஆரியம் எனும் கள்வன் அதைக் கொள்ளைகொண்டு போகிறான். தமிழன் இன்னும் தெளிவு பெறவில்லை.

எட்டமுடியாத இடத்தில் கட்டிய உன் இல்லம் எதிரியால் அழிக்கப்படுகிறது. அதுபோல், சொல்லொணு வேதனையுடன் கூடிய உழைப்பின்மூலம் கட்டப்பட்ட தமிழனின் வீடும் அழிந்துவிட்டது—இன்பம் எனும் வீடு இடிக்கப்பட்டது.

நீ உன் பொருள் இழந்து ஏங்குகிறாய். தமிழனும் தன் சொத்திழந்து, சுகமிழந்து சுதந்திரமிழந்து, உரிமையிழந்து உள்ளத்தையுமிழந்து மனைதோறும் சென்று பிச்சை ஏற்கிறான்.

உன் கூடு எரிக்கப்பட்டபோது, உன்னை மட்டிலுமாவது காப்பாற்றிக்கொள்ள முடிந்தது இரக்கைகள் இருக்கும் காரணத்தால். தமிழனுக்குத் தன்மானம் என்னும் இரக்கையில்லை ஆகவே தன்னைக் காத்துக்கொள்ள முடியவில்லை.

நீ காடு, மலை, மேடு, பள்ளம், எங்கும் சென்று தெவிட்டாத தேனைத் தேடித் திரிகிறாய். தமிழனும் தான் பர்மாக் காடுகளுக்கும், ரப்பர் தேயிலைத் தோட்டங்களுக்கும், சுரங்கங்களுக்கும், ஆலைகளுக்கும், கல் வெட்டும் மலைகளுக்கும் சென்று, வாழ வழி தேடுகிறான்.

காலை வந்ததும் - காலையைக் கண்டதும், களிப்பெய்துவாய் நீ. மாலை வந்ததும் மகிழ்ச்சி கொள்வாய். ஆனால் தமிழன் காலை வந்ததும் தன் கடனை, பணி செய்துகிடக்க வாடிய முகத்துடன், வருந்திச் செல்வான். மாலை வந்ததும் தளர்ந்த நடையுடன், ஓய்ந்த உடலோடு, சோர்ந்த முகத்துடன் வீடு வருவான்.

மல்லிகை உன்னை மகிழ்வுடன் அழைப்பாள். ரோஜா உன்னைக் கண்டு களிப்பாள். மற்றொர் மலரும் உன்னைக் கண்டதும் உன்மெய்சேர உவப்புகொண்டு உன்னை எதிர்பார்ப்பாள். தமிழன் வீட்டில், மருதம் நினைப்பாள் 'மாலை வருமா, மணவாளன் வந்தால் மடியில் பணம் ஏதாவது, குடித்தது போக, குடித்

தனத்துக்கு கொண்டுவருவாரா' என எதிர்ப்பார்ப்பாள். தகப்பனைக் கண்டதும் முத்துவும், பொன்னியும், ஒருவரையொருவர் கூவியழைப்பர். அப்பன் தமக்குக் காசு தருவார், எதிர்க்கடைக்குச் சென்று எள்ளுருண்டை வாங்கிச் சாப்பிடலாம் என்று நினைப்பர். குடும்பத்தின் மற்ருேரும் ஆவலாயிருப்பர், தமிழனின் வருகையை நோக்கி.

தென்றலும் நிலவும் தெரியும் உனக்கு. தென்றல் உணரான்; நிலவின் தன்மை அறியான் தமிழன்; மலர் வனம் உனது மாளிகை; மண்குடிசை அவனது மாளிகை. நீ அருந்துவது தீந்தேன்; அவன் குடிப்பது புளித்தக் கஞ்சி. உன் மனம் பூக்காட்டை நாடும். அவன் தேடுவது சாக்காடு. நீ வேண்டுவது இறவாமை. அவன் விரும்புவது பிறவாமை. உங்களுக்குள் சில ஒற்றுமை வேற்றுமைகள் இருக்கக் காரணம் என்ன?

★ ★ ★


## வெளி வருகின்றது!

# "புரட்சி முரசு"

— என். இ. பாலகுரு —

"புரட்சிப்பாவும் யாப்புப்பாவும் இருதுருவங்கள் ஆனால் இதில் இருதுருவங்களும் சங்கமம் ஆகின்றன இதுவும் ஓர் புரட்சிதானே"

**விலை ரூ. 0—12—0**

விபரங்களுக்கு:—

## "தமிழகம்" பிரசுராலயம்

**தெப்பக்குளம்—திருச்சி.**

# எண்திசை எதிரொலி

(மாணிக்கம்)

★

★ அறியாமை எனுங் கடலில் அடிமை என்னும் அலையால்
ஆழ்த்தப் பட்டிருக்கும் அருமைச் சகோதரரே!
வறுமை எனும் தோழனோடு உயிரும் உடலும் போல்
ஒன்றியிருக்கின்ற ஒற்றுமைதான் என்ன!—யாக்கை

★ நிலையாமைபேசி நம்மை நடுவீதிதனில் நிறுத்தும்
கொலைகாரர் தம்மை நீர் கொன்று வீழ்த்தீரோ?
ஆலை வாய்க் கரும்புபோல் அனுதினம் அல்லற்பட்டும்
நலிவு நமை நாடல் ஏன்? நாம் செய்த தீங்கென்ன?

★ மதமெனும் மதுவருந்தக் கடவுள் எனும் போதை
கண்ணைக் குருடாக்கத் தள்ளாடி ஏழ்மை எனும்
பாதாளப் படுகுழியில் பதறிவிழு கின்றார் அந்தோ!
பண்டைத் தமிழ் நாட்டுப் பண்பாடு இது தானோ!

★ சாத்திரத்தின் பேரால் சண்டை சச்சரவுகள்
சாதிப்பிரிவினையால் கொள்ளை, கொடுங்கொலைகள்,
ஆத்திர மூட்டுகின்ற, அட்டூழியங்கள் போக்கி,
நீதியினை நிலைநாட்டு—நந்தமிழ் நாட்டாரே!

★ எதிரிகள் எத்தனை கோடி யிருந்தாலும்
என்னிரு தோள்கள் பூரிக்க, மெய் சிலிர்க்க,
எதிர்த்தொழித் தன்னோரின் எண்ணம் அழிந்துபட,
எக்காளம் திக்கெட்டும் எதிரொலி செய்விப்பாய்!

# ஆலயப்பிர வேசமா -

# அடிமையாக்கும் சூட்சியா?

("பழந்தமிழன்")

ஆதிதிராவிட மக்கள் இந்நாட்டின் பூர்வீகக் குடி மக்கள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தக் குடி. இந்நாட்டுக்கு சொந்தமானவர்கள். இந்நாட்டை ஆண்டவர்கள். "ஒன்றே குலம்" என்ற உயர்ந்த கொள்கையுடைய திராவிட மக்களில் ஒரு பகுதியினர் ஆதி திராவிடர். அக்காலத்தில் திராவிடர், ஆதிதிராவிடர் என்ற பாகுபாடே கிடையாது. யாவரும் ஒருகுல மக்களாக, சரிநிகர் சமானமாக நாட்டின் செல்வம், உரிமை, அரசியல், கல்வி, முதலியவற்றை அனுபவித்து, இன்ப வாழ்வு நடத்தினர். சாதி வித்தியாசங்களோ, சமயப் பூசல்களோ, மூடப் பழக்கவழக்கங்களோ இல்லை. பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டது அவர்கள் வாழ்க்கை. ஆனால், ஆரியர்கள் இந்நாட்டில் காலெடுத்து வைத்த அன்றே புகுந்தன, சாதி வித்தியாசம், மத வித்தியாசம், ஆண்டான் அடிமைத்தனம், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு, மூடப்பழக்கவழக்கங்கள், அறிவுக்கொவ்வாத அநாச்சாரங்கள். தங்களை கடைசிவரை எதிர்த்தவர்களை, ஆரியர், தீண்டப்படாத சண்டாள பஞ்சம மக்களாக ஆக்கினர். ஊருக்கும் புறம்பே ஒதுக்கித் தள்ளினர். தெருவில் நடக்கக் கூடாது, கோவிலில் நுழையக்கூடாது, குளத்தில் இறங்கக் கூடாது, பொது பாட்டையில் நடக்கக்கூடாது என்று தடுத்தனர். தொட்டால் தீட்டு, நெருங்கினல் தீட்டு, பார்த்தாலும தீட்டு என்று பகன்றனர். ஆரியர்கட்கு அடிமையான மற்றவர்களும், ஆதிதிராவிட மக்களை அடிமைப்படுத்துவதையே நோக்கமாக, தொழிலாகக் கொண்டார்கள். அதனல் அன்று வீழ்ச்சியுற்ற ஒரு பெரும் சமுதாயம் இன்னும் மீளமுடியவில்லை. அன்று தீண்டப்படாத மக்களாக ஆக்கப்பட்ட இக்நாட்டு பழங்குடிமக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குப் பிறகும் ஆகாய

விமானம், வானொலி, கம்பியில்லாத் தந்தி முதலிய நூதனமான சாதனங்கள் ஏற்பட்டுள்ள 20வது நூற்றாண்டிலும், குறிப்பாக அணுகுண்டு காலமாகிய 1947லிலும் தீண்டப்படாத சமூக மாகவே இருக்கிறார்கள். ஆயிரம், பத்தாயிரம், ஒரு லட்சம், இரண்டு லக்ஷம், ஒரு கோடி, இரண்டு கோடி மக்களல்ல. 8 கோடி மக்கள்; 7 லட்சம் கிராமங்களிலும் இருக்கிறார்கள். வாழவில்லை; மனித உரிமையுடன் அல்ல மிருகத்தை விட கீழான நிலையில்.

ஆங்கிலேயர் வரவால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏதோ சிறிது முன்னேறி இருக்கிறார்கள் என்றாலும் குறிப்பிடத்தக்க அளவுக் கல்லக. காரணம் ஆங்கிலேயர் அல்ல, ஆரியர், ஜாதி இந்துக்கள். இந்நாட்டை மீட்க 1885ம் ஆண்டு தோன்றிய காங்கிரஸ் 60 வருடங்கட்குப் பிறகும் இந்தப் பெருங்குடிமக்களின் புலம் பலைத் தணிக்க திட்டப்படி வேலை, செய்யவில்லை. இந்த நீண்ட காலமாக காங்கிரஸ் செய்த மகத்தான வேலை ஒன்றே ஒன்று, அதுதான் ஆங்கிலேயர் மீது இந்தியர் ஆத்திரப்படச் செய்தது. ஆனால் இந்த ஆத்திரம் ஆங்கிலேயர் மீது ஒரு தரங்கூட பாய்ந்த தில்லை. 1942 ஆகஸ்ட்டு புரட்சியிலேயே இல்லை. இந் நாட்டு மக்களின் வாழ்க்கையை சிதைக்க, விரோதத்தை வளர்க்க, உள்ள ஒற்றுமையைக் கலைக்க, கட்சிப் பிளவுகளை அதிகமாக்கப் பயன்பட்டதை யாரும் மறுக்க முடியாது. 1942ல் நடந்த சம்பவங்களும் இன்று, நாடுள்ள நிலையும் இதற்குப் போதிய சான்று.

இந்த 8 கோடி ஷெடியூல்டு வகுப்பு மக்களின் இன்னலைத் தீர்க்க முன் வராததோடு இவர்களை என்றென்றும் அடிமை யாக்க முயற்சிக்கும் வேலையில் தீவிரமாக கச்சை வரிந்து கட்டினர் 1931ல். இதை ஆரம்பித்தவர் அஹிம்சா மூர்த்தி காந்தியார். ஆரம்பமானது லண்டனிலே. அங்கு நடந்த இரண்டாவது மாநாட்டிலே 8 கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் ஏக தலைவர் டாக்டர் அம்பேத்கார் தம் மக்கள் இந்துக்களிடத் தில் சொல்லவொண்ணா துன்பங்களுக்கு இலக்காகி துயருறுகின் றனர். இந்துக்கள் என்று கூறப்பட்டாலும் இந்துக்களுக்குள்ள மரியாதை, உரிமை, சலுகைகளில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட தம் மக்கட்கு இல்லை என்று எடுத்துக்கூறி,, ஆகவே தாழ்த்தப்

பட்ட சமுதாயம் தனி இனமாக இருக்க விரும்புகிறதென்றும், அரசியல் சமுதாய உரிமை பெற அது வேண்டி நிற்பது தனித் தொகுதி என்றும் வாதாடினூர். பொதுத் தொகுதிதான் சிறந்தது என்று புலம்பினூர் காந்தியார். வெற்றிமாலே சூடியவர் காந்தியாரல்ல, டாக்டர் அம்பேத்கார். தனித் தொகுதி அளிக்கப்பட்டது. அகங்குளிர்ந்து, முகம்மலர்ந்து லண்டனே விட்டுப் புறப்பட்டார் டாக்கடர் அம்பேத்கார். முகத்தில் கரியைப் பூசிக்கொண்டு, கண்ணீருடன் திரும்பினூர் காந்தியார்.

இதனூல் கபட நாடக காந்தியாரின் மனம் பொருக்கவில்லே. பொதுத்தொகுதி வேண்டி 1932ல் உண்ணுவிரதம் இருந்தார். இவரைத் திருப்திபடுத்தவும், வெஃடியூல்டு வகுப்புமக்கஃளே ஏய்க்கவும் அங்குமிங்குமாக சில ஆலயங்கள் திறக்கப்பட்டன. ஒப்பற்ற தலேவர்கள் டாக்டர் அம்பேத்கார், N. சிவராஜ், திவான்பகதூர் சீனிவாசன் முதலியவர்கஃளேப் பயமுறுத்தி பூனு ஒப்பந்தம் என்னும் பொதுத்தொகுதி ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கினர் காங்கிரஸ்காரர்கள். இந்தத்தேர்தல் முறை தனித்தொகுதியும், பொதுத்தொகுதியும் கலந்தது. இது ஒரு விஞேதமான முறை! உலகத்தில் இல்லாத உன்னத முறை! புண்ணியமூர்த்தி காந்திமகான் பெரு நோக்குடன் அளித்த புது தேர்தல்முறை. தங்கள் குறையை எடுத்துச் சொல்ல தங்களுக்குப் பிடித்தமானவர்கஃளே தேர்ந்தெடுப்பது தனித்தொகுதி முறைப்படி. பிறகு, தாழ்த்தப்பட்ட மக்கஃளே அடிமைப் படுகுழியில் ஆழ்த்தி வைத்திருக்கும் ஆரியர்களும், சாதி இந்துக்களும் சேர்ந்து வாக்குக்கொடுப்பது. பொதுத் தேர்தலில். திவ்வியமான தேர்தல் முறையல்லவா இது. இதைப்பற்றி தனியாக எழுதவேண்டும். ஆகையால் ஆலயப் பிரவேசம் பற்றி மேலே செல்வோம்.

தீண்டாமை, சாதி, மத வித்தியாசங்கள் மும்மரமாகக் கையாளப்படும் இடங்கள் ஆலயங்கள், அக்கிரகாரங்கள், உணவு விடுதிகள், சத்திரங்கள், மடங்கள், தண்ணீர் பந்தல்கள், முக்கியமானவை. குறிப்பாக ஆலயம், மக்களுக்கே பொதுவான இறைவன் எழுந்தருளி இருப்பதாகக் கூறப்படும் கோயில்களுக்குள்ளே அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் அனுமதிக்கப் படாமல் இருப்பது அநியாயம், அறிவிற்கும், இயற்கைக்கும் பொறுத்த

மற்றதல்லவா? மசூதிகளுக்குள்ளே மகமதியர் அல்லாதவர் கூடப்போய் அல்லாவை வழிபடலாம். கிருஷ்துவக் கோயில்களுக்குள்ளே மற்ற சமயத்தவரும், தாராளமாக சென்று மண்டியிட்டு வழிபடலாம். ஆனால் இந்தக் கோயில்களுக்குள்ளே இந்துக்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் நுழையக்கூடாது. வாசப்படியண்டை கூடப் போகக்கூடாது. கனவிலும் கருதக் கூடிய செய்கையா இது?

காந்தியாரின் உண்ணுவிரதத்தை நிறுத்துவதற்காகத் திறக்கப்பட்ட கோயில்கள் பிறகு மூடப்பட்டுவிட்டன. காந்தியாரோ, காங்கிரசோ, சாதி இந்துக்களோ, இந்துக்களுக்கு ஸ்தாபனமாக இருக்கக்கூடிய இந்துமஹாசபையோ அதன்பிறகு ஆலயங்களை ஆதி குடிமக்களுக்குத் திறக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. எத்தனை உண்ணுவிரதங்கள், சத்தியாக்கிரகங்கள், ஒத்துழையாமைகள் 1932க்கும் பிறகு. இந்நாட்டை பீடித்திருக்கும் இழிவுகளைப் போக்க ஒரு உண்ணுவிரத முண்டா? ஒரு சத்யாக்கிரகமுண்டா? ஒரு ஒத்துழையாமை உண்டா? உண்ணுவிரதம் பெரியாரவர்கள் கூறுவது போல சண்டிதனமென்பது பகுத்தறிவுள்ள மக்களின் அபிப்பிராயம். அர்த்தமற்ற காரியங்களுக்காக இவைகள் கையாண்டபோது இந்த இழிவுகளைப்போக்க இந்த காங்கிரஸ்காரர்கள் ஏன் ஒரு அகில இந்திய சத்தியாக்கிரகம் செய்யக் கூடாது? தாழ்த்தப்பட்ட மக்களின் மானத்தைக் காப்பாற்றி, உரிமை வாங்க திராவிட மக்களின் தன்னலமற்ற தந்தை பெரியார் அவர்கள் வைக்கத்தில் சத்தியாக்ரஹம் செய்து வெற்றி மாலை சூடி, "வைக்கம் வீரர்" என்ற பட்டம் பெற்ற பிறகாவது என்றுதான் கேட்க வேண்டியிருக்கிறது? (தொடரும்)

"தமிழகம்"

★

ஒரு வருட சந்தா ரூ. 3—8—0

# இல்லாத சாமி துணை

(து. வீ. நாராயணன்)

[எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் முன் பக்கத்தில் கொட்டை எழுத்தில் இருந்துகொண்டு நேயர்களை முறைத்து முறைத்துப் பார்ப்பது! "இப்பத்திரிகையில் வெளிவரும் கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவனவல்ல" என்ற வாக்கியங்கள் தான். இந்தப் பயந்தாங்கொள்ளிப் பழக்கம் நாளுக்கு நாள் பத்திரிகை உலகிலே அதிகமாகப் பரவிக்கொண்டு வருகிறது. இவைகளை நிவர்த்தி செய்வதே நமது கடமை. நாம் யாருக்கும் பயப்படப் போவதில்லை. ஆகவே "இக்கதையும், இதில் வரும் சம்பவங்களும் கற்பனையல்ல; உண்மையாகவே நடந்தவைகள்." என்பதை முன்கூட்டியே தைரியமாகத் தெரிவித்துவிடுகிறேன்.]

## அடியேன் எழுதுகிறேன்:

'தொடர் நாவல், தொடர் நாவல்' என்று பத்திரிகை உலகம் தொல்லை கொடுக்கும் இந்த நாளிலே 'இதோ, தொடராத நாவல் எழுதுகிறேன்' என்று துணிந்து ஒரு கதையை எழுதினார் தோழர் நையாண்டி பாரதி. அதைப் போலவே இதோ நானும் ஒரு தொடராத நாவல் எழுதுகிறேன் இதில் குற்றம் குறைகளிருந்தால் கண்டிப்பாக என்னையாரும் மன்னிக்கக்கூடாது.

## அந்தராத்மா அலறுகிறது:

உஷார்! உஷார்! நாஸ்திகர்களும் மூடப்பழக்க வழக்கங்களையும்—பகுத்தறிவுக்கேற்காத செயல்களையும்—நம்பமாட்டோம் என்று கூறும் சுயமரியாதைகாரர்களும், திராவிடர் கழகத் தோழர்களும் கண்டிப்பாக இக்கதையை படிக்கக் கூடாது. மீறி படித்தால் கம்யூனிஸ்டுகள் என்று குற்றம் சாட்டப்பட்டு (?) கைது செய்யப்படுவார்கள். முடியாது படித்துத்தான் தீரவேண்டும் என்று கூறுபவர்கள் (இக்கதையைப் படித்து முடிக்கும்வரையிலாவது—புராணங்களை நம்பவேண்டும்,

**குறிப்பு :**—மிஸ்டர் 'கடப்பாரை' எழுதிய சிறப்புரை இதில் சேர்க்கப்படவில்லை. காரணம், காகிதப் பஞ்சம்தான் வேறொன்றுமில்லை!

**அன்பளிப்பு :**

உலகம் தோன்றியதிலிருந்து அபேதவாதக் கொள்கையை அனுஷ்டித்துவரும் திருடர்களுக்காகவே இக்கதையை எழுதுகிறேன். திருடர்களுக்கும் கடவுள் உதவி செய்தார் என்பதை நிலைநாட்டவே இக்கதை. ஆகவே திருடர்கள் ஏதாவது எனக்கு அன்பளிப்புத் தவருவதாக இருந்தால் தாராளமாக தரலாம். நேரில் வந்து தர இஷ்டமில்லாதவர்கள் தபால் மூலமாகவும் அனுப்பலாம். அல்லது எங்கள் வீட்டு மாடியில் உள்ள காலி அறையில் இதற்கென்றே திறந்து வைத்திருக்கும் காலி மணிபர்சில், யாருக்கும் தெரியாமல் வந்து சில சில்லரைக் காசுகளைப் போட்டுவிட்டுப் போனாலும் போகலாம். குறிப்பு :- வீட்டின் மேல் மாடியில் வைத்திருப்பது காலி மணிபர்ஸ்தான். அதில் ஒரு செல்லாத பைசாகூட இல்லை.

## கதை ஆரம்பமாகிறது

"என் சார்! இப்ப, நீங்க போட்டது என்ன?"

"ஆடுதன, கிளாவரா?"

"ஓஹோ! ஜாக்கியா?"

"என், சார்! பேசாம இருக்கிங்க! நீங்கல்ல இப்ப எறங்கனும். எங்கே, ஒரு அடி அடியுங்க பார்க்கலாம்."

"ஹூ.........சபாஸ்! பரவாயில்லையே!"

"எம்பர்! கொட்டாவி விடரே? நீயும் வந்து உட்காரே!"

எல்லோரும் சிரிக்கும் சப்தம் கேட்கிறது.

"என் பிரதர்! ஹிட்லரை, முசோலோனி அண்ணன்னுல்ல கூப்பிட்டாராம்!

"என்ஒய்! பிரமாதப்படுத்திரேள்! என்ன இருந்தாலும் உங்க அண்ணன் மகன் அந்த காரியம் செஞ்சிருக்கப்படாது பாருங்க"

"ஹி!.........ஹி!.........ஹி!"

இவ்விதமான பேச்சுகளையும், சிரிக்கும் சப்தங்களையும் நீங்கள் கேட்க்க விரும்பினுல் மதருசிலுள்ள அய்யாமுத்துத் தெருவிலிருக்கும் 23-ம் நெம்பர் வீட்டின் மேல் மாடியில் உங்கள் சொந்தக் காதைக் கொடுத்து கேட்டிருக்க வேண்டும்.

அதுவும் என்றைக்கு என்று சொல்ல மறந்துவிட்டேனே, 1948-ம் வருடம் இல்லாத மாதம் 33-ந்தேதி இரவு 13 மணிக்குத்தான். (இந்த இடத்தில் ஒரு சமயம் தவறினுல் மறுசமயம் வாய்ப்பதரிது என்ற பழமொழியைச் சேர்த்துக்கொண்டால் நல்லது. ஆனுல் அது உங்கள் இஷ்டம்.)

நீங்கள்தான் இந்த சந்தர்ப்பத்தை இழந்து விட்டீர்களென்ருல், மற்றவர்களும் இழந்துவிட்டதாக நினைத்துக் கொள்ளாதீர்கள். மேலே நடந்த அரட்டைக் கச்சேரிகள் அனைத்தையும் கீழே நின்றுகொண்டிருக்கும் சாம்பு கம்பியில்லாத் தந்தியின்மூலம், வாயு பகவானின் தயவால் கேட்டுக்கொண்டிருக்கிருன்,

இந்த சாம்புவைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் அந்த ஊர் போலீசாரிடம் நீங்களே நேரில் போய் விசாரித்துக் கொள்ளுங்கள்.

கீழே நின்றுகொண்டிருந்த சாம்பு ஒரு நிமிடம் தலையைத் தடவிக்கொண்டே எதையோ யோசித்தான். பிறகு சாவகாசமாக தன் சட்டைப் பையில் கையைவிட்டு ஒரு கத்தரிக்கோல் சிகரெட்டையும் அதற்குரிய நெருப்புப் பெட்டியையும் எடுத்து சாவகாசமாகப் பற்றவைத்து இழுக்கத் தொடங்கினுன்.

சாம்பு இழுத்துவிட்ட சிகரெட் புகை வளையம் வளையமாக சுழன்று சுழன்று வீட்டின் மாடியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. சிகரெட் புகை மேல் மாடியை அடைந்ததைக் கண்ட சாம்பு முகமலர்ச்சியுடன் அந்தப் புகையைப் பிடித்துக் கொண்டு விறுவிறு வென்று மேலே ஏறினுன். மேலே ஏறி மாடியை அடைந்த சாம்பு அங்கு சாத்தியிருக்கும் கதவு இடுக்கின்வழியாக உள்ளே பார்த்தான்.

உள்ளே ஏழு எட்டு பேர்கள் சதுரமாக உட்கார்ந்து கொண்டு சீட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கிருந்த இருவருக்குள் ஒரு வாய்ச்சண்டை ஆரம்பமாகிவிட்டது, நக்கீரருக்கும் சிவனுக்கும் ஏற்பட்டதுபோல!

'என்ன ஓய்! வரவர மிக மோசமாக ஆட்டத்தில் திருட்டுத்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டீர்.' என்றார் முதல்வர்.

'என்ன? நானா திருட்டுத்தனம் செய்கிறேன்! என்னப்பா! சுத்தமடையனாயிருக்கிறீர்! என்றார் மற்றவர், தனக்குத் திட்டுவதிலும் மரியாதையாகத் திட்டும் திறமை உண்டு என்பதை நிரூபித்துக்கொண்டே.

அப்பொழுது சாம்புவுக்குத் தூங்கும் இடத்தில் திருடுவதைவிட அரட்டைகளிடம் திருடுவது எவ்வளவோ சுலபம் என்று தோன்றிற்று. இதைப்பற்றி யோசித்துக் கொண்டே அங்கிருந்த படிகளின் வழியாக கீழே இறங்கி ஒரு பெரிய விசாலமான அறைக்கு வந்து சேர்ந்தான். அங்கு ஒரு பெரிய மேஜையைச் சுற்றி நான்கு, ஐந்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. இன்னும், நாவல்களிலே கூறுவார்களே நாவல் ஆசிரியர்கள், "அழகிய படங்களும், பெரிய பெரிய சோபாக்களும் இருந்தது. அந்த அறையைப் பார்ப்பதற்கு இந்திரன் மாளிகையோ என்று என்னும்படியிருந்தது" என்று—இந்திரன் மாளிகையை நேரில் பார்த்துவிட்டு வந்தவர்கள்போலப்! அதைப்போலவே இந்த அறையும் இருந்தது என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்.

கதையை வளப்பானேன். அங்கிருந்த ஒரு சிறிய அறையில் ஒரு பெரிய பெட்டியிருந்தது. (ரூமைவிட பெரிதா? என்று கேட்காதீர்கள்) அந்தப்பெட்டியைத் தன் தொழில் முறைப்படி திறந்தான் சாம்பு. அதனுள் ரூபாய்களும், நோட்டுகளும் கட்டு கட்டாக—உதிரியாக—இருந்தது—இதில் எது உங்களுக்குப் பிரியமோ அப்படியே வைத்துக்கொள்ளுங்கள்.

இவைகள் அனைத்தையும் சந்தடி செய்யாமல் சுருட்டிக் கொண்டு அங்கிருந்த கதவைத் திறந்துகொண்டு ஓட்டம் பிடித்தான் சாம்பு. அவனுக்கு இருந்த குஷியில் தன்னை ஒரு மனிதன் தொடர்ந்து வருவதைக்கூட கவனிக்கவில்லை.

அவனைத் தொடர்ந்து சென்றவன் வேறுயாருமில்லை. அவனது மாஜி நண்பன் பழனிதான். கொஞ்சநாட்களுக்கு முன்பெல்லாம் சாம்புவும் பழனியும் சேர்ந்தேதான் எந்த காரியத்தையும் செய்வார்கள். சாம்புவை எங்குகண்டாலும் அவன் கூடவே பழனியையும் காணலாம். இப்படி ஒற்றுமையாக இருந்த இவ்விருவருக்கும் கொஞ்ச நாட்களாக ஏதோ ஒரு காரணத்தினுல் பகைமை ஏற்பட்டுவிட்டது. மிஸ்டர் சிவபெருமானும், ஸ்ரீமதி பார்வதிதேவியும், நடராஜர் காளி உருவத்தோடு சிதம்பரத்தில் போட்டி போட்டுக்கொண்டு நாட்டியமாடினுர்களே, அதைப்போல இவ்விருவரும் அன்றிலிருந்து போட்டி போட்டுக்கொண்டு தனித்தனியே தங்கள் தங்கள் தொழிலை செய்துகொண்டு வந்தார்கள்.

ஒருநாள் பழனி வேட்டை கிடைக்காமல் சுற்றிக்கொண்டு வரும்பொழுதுதான் மாடிவீட்டில் சப்தம் கேட்பதையும், ஒருவன் அதையும் அலட்சியமாக எண்ணி சிகரெட் புகையைப் பிடித்துக்கொண்டே மேலே ஏறிப் போவதையும் கண்டான். அவனை சாம்புதான் என்று தெரிந்துகொள்ள அதிகநேரம் ஆகவில்லை பழனிக்கு. சாம்பு மேலே சென்ற கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கையில் ஒருபெரிய மூட்டையுடன் வெளியே வருவதைக் கண்டதும் இவனுக்கு உண்டான பொருமையும் ஆச்சர்யமும் கோபமாக மாறியது. அவன் மேலே ஏற்பட்ட கோபம் அந்த மூட்டையை எப்படியாவது கைப்பற்றிவிடவேண்டும் என்ற எண்ணத்தில் வந்துமுடிந்தது. அவனையறியாமலே அவன் கால்கள் சாம்புவைப் பின் தொடர்ந்தது.

இவைகளையெல்லாம் அறியாத சாம்பு நேராகச் சென்று, பிறகு இரண்டு மூன்று சந்துக்களைக்கடந்து அங்கிருந்த ஒரு வீட்டிற்குள் சென்றுன். அந்த வீட்டின் மேல்மாடியிலுள்ள அறையைத்தான் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தான். மேலே சென்ற சாம்பு, மூட்டையை அங்கிருந்த பெட்டியின் மேல் வைத்துவிட்டு 'உஸ்.........அப்பாடா' என்று கீழே உட்கார்ந்தான். அவன் உடம்பு பூருவும் அதிக வியர்வையாக இருந்தது. அதோடு அதனுல் ஏற்பட்ட நாற்றம் ஒருபக்கம். ஆகவே குளித்துத்தான் ஆகவேண்டும், இன்றேல் தூக்கம் வராது என்ற எண்ணம் சாம்புவுக்கு ஏற்பட்டது.

கீழேபோய் குளிக்கலாமா? என்று யோசித்தான் யாராவது சந்தேகப்பட்டால் என்ன செய்வது என்ற பயம் ஒரு பக்கம். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவனாய், அங்கிருந்த பெரிதும் அதிக சிறிதுமல்லாத ஒரு பாத்திரத்தைத் தொட்டுப் பார்த்தான். அதில் நிறைய தண்ணீர் இருந்தது. உடனே முகமலர்ச்சியுடன் அங்கு ஒரு சிறிய சந்தில் தனித்திருந்த துணியை எடுத்துவிட்டு குளிக்க ஆரம்பித்தான். அந்தச் சந்து அறையை சுத்தம் செய்ய தண்ணீர் விட்டுக் கழுவினால் தண்ணீர் கீழே போவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

சாம்பு குளிக்க ஆரம்பித்ததும் தண்ணீர் அச்சந்தின் வழியாகக் கீழே சென்று தொடர்ச்சியாக விழுந்து கொண்டிருந்தது. இங்கு இவ்விதம் இருக்க அவனைத் தொடர்ந்து வந்த பழனி சற்றுநேரம் கீழே நின்று யோசித்தான். பிறகு மெல்ல கதவைத் தள்ளினான். தள்ளமுடியவில்லை. சாம்பு உள்ளே சென்றபோது தாள்போட்டு விட்டுச் சென்றுவிட்டான். மேலே செய்வதொன்றும் தெரியாமல் விழித்தக்கண் விழித்தபடியே அங்கேயே கொஞ்சநேரம் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். திடீரென்று மேலேயிருந்து தண்ணீர் தொடர்ச்சியாக விழத் தொடங்கியது, இதனைக் கண்டதும் பழனிக்கு ஒரு அபூர்வ ஞானோதயம் உண்டாயிற்று. தொடர்ச்சியாக விழுந்துகொண்டிருந்த தண்ணீரைப் பிடித்துக்கொண்டே விறுவிறுவென்று மேலே ஏறினான். ஆச்சு பாதிதூரம் ஏறிவிட்டான். உடனே கீழே விழுந்துகொண்டிருந்த தண்ணீர் நின்றுவிட்டது. தண்ணீர் நின்றதும் பாதிதூரம்வரை ஏறிய பழனி திடீரென்று கீழே விழுந்தான்.

இப்பொழுது மேலேயிருந்த சாம்பு அழுக்குத் தேய்த்துக் கொண்டிருந்தான்.

மறுபடியும் தண்ணீர் கீழே விழத் தொடங்கியது. கீழே விழுந்தபழனி மறுபடியும் ஏறலாமா? வேண்டாமா? என்று யோஜித்துக்கொண்டிருந்தான். அடுத்த வீட்டு அய்யர் சொன்ன 'பகீரதன் கதை' அப்பொழுதுதான் அவனுக்கு நினைவுக்கு

வந்தது. கீழே விழுந்த வலி ஒருபக்கம் பணப்பையின் நினைவு வந்தது. ஏறலாம் என்றது பணமூட்டையின் நினைவு. வேண்டாம், ஏறுதே என்றது வலியின் உபத்திரவம் இரண்டுக்கும் போர். சற்றுநேரம் விழுந்துகொண்டிருக்கும் தண்ணீரை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். சரி, வந்தது வரட்டும் என்று முடிவுகட்டிக்கொண்டு மறுபடியும் விறுவிறு வென்று மேலே ஏறினான். ஆச்சு முக்கால் பாகத்துக்குமேல் ஏறிவிட்டான். இன்னும் கொஞ்சம்தான் பாக்கி. ஜன்னல் கம்பியைப் பிடிக்கப் போகும் சமயம்.

மேலேயிருந்த சாம்பு ஏதோ சப்தம் கேட்பதை அறிந்து ஜன்னல் வழியாக கீழ் பார்த்தான். ஒரு கறிய உருவம் தண்ணீரைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறுவதைக் கண்டான். உடனே டக்கென்று குளிப்பதை நிறுத்தினான்.

குளிப்பது நின்றதும் கீழே விழுந்துகொண்டிருந்த தண்ணீர் மெல்லியதாக விழத் தொடங்கியது. மெல்லியதாக விழுந்த தண்ணீர் பழனியின் கனத்தைத் தாங்கமாட்டாது அத்துக் கொண்டது. மேலே லட்சியப் பாதையில் தலை நிமிர்ந்து சென்ற பழனி மறு நிமிடம் தலைகீழாக கீழே வந்து சேர்ந்தான்.

கீழே விழுந்த பழனி வலியைக்கூட பொருட்படுத்தாமல் எழுந்து ஓட்டம் பிடித்தான்.

மேலேயிருந்த சாம்பு ஒரு நொடியில் விஷயத்தை யூகித்துக்கொண்டு தன் பணப்பையைக் காப்பாற்றிய இல்லாத சாமியை மனத்தில் நினைத்துக் கொண்டான்.

## ஓங்குக இல்லாத சாமி துணை!

## முடிவுரை

இக்கதையில்—இல்லை, இல்லை; சரித்திரத்தில்—இரண்டு சம்பவங்கள் பொருத்தமில்லாமல் இருப்பதாக சிலர் கூறலாம் அவ்விதம் கூறுபவர்கள் புராணங்களை நம்பாதவர்களாகத்தான் இருக்கவேண்டும், அவ்விதம் புராணங்களை நம்பாதவர்கள் நமது கதையைப் படிக்கக் கூடாது என்று முன்பே சொல்லி

யிருந்தோம். இன்னும் சிலர், புராணங்களை நம்பினால் இதை எப்படி நம்பமுடியும் என்று கேட்கலாம். அதற்கு இதோ பதில் தருகிறேன்.

முன்பெல்லாம் நம் நாட்டிற்கு மேல் உலகத்திலிருந்து இந்திரன், நாரதர், மகாவிஷ்னு, சிவன் முதலிய கடவுள்களெல்லாம் நினைத்தபோது இவ்வுலகிற்கு விஜயம் செய்து விட்டுப் போவார்கள். அப்படி அடிக்கடி இங்கு வந்தவர்கள் மேல் உலகிலிருந்து கீழ் உலகிற்கு நடந்தோ, அல்லது படிகளின் வழியாக இறங்கியோ, அல்லது திடீரென்று குதித்தோ வருவதில்லை. நூல் ஏணிகளின் வழியாகத்தான் வந்திருப்பார்களோ என்று யோசித்தால் அவ்விதமும் வந்ததாகத் தெரியவில்லை. அசையாமல் ஆகாய மார்க்கத்தில் கண்ணுக்குத் தெரியாமல் வந்து போனார்கள். அப்படியிருக்க நமது கதாநாயகர்கள் தண்ணீரின் வழியாக ஏறியதையும், சிகரெட் புகையின் வழியாக ஏறியதையும் யாரும் மறுக்கமாட்டார்கள் என எண்ணுகிறேன். அவர்களுக்கு தெய்வீக சக்தி யிருந்த தென்றால் இவர்களுக்கு இல்லாதசாமி துணை இருந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

**ஓங்குக இல்லாதசாமி துணை!**

அவைகளையெல்லாம் நம்பும் நமது தோழர்கள் இவைகளை நம்பமாட்டோம் என்று கூறமாட்டார்களென்று நினைக்கிறேன்.


உணர்ச்சி செறிந்த நடை! சிந்தனை நிறைந்த எழுத்து!!

**கருப்புச் சட்டைப் படை**

**— து. வீ நாராயணன் —**

" திராவிடர் கழக சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டிய முக்கிய நிகழ்ச்சியான மதுரைக் கலவரத்தைப் பற்றின விளக்கமான சரித நூல் ".

**விலை 0-8-0**

கிடைக்கு மிடம்:—

**" தமிழகம் " பிரசுராலயம்**

**தெப்பக்குளம்—திருச்சி.**

சென்னை-600 000.

# விசித்திர ராமாயணம்

(இ. டி. பாலகிருஷ்ணமுதலியார்)

## முகவுரை

நமது தேசத்திலே பல புராணங்களையும் இதிகாசங்களையும் கடவுளின் திருவிளையாடல்களெனக் கூறி கவிநயத்தோடும் பொருள் நயத்தோடும் பெருங் காவியங்களாக மனதைக் கவரும்படி எழுதிப் பாமரமக்களை மயக்கியவற்றுள், பாரதம், ராமாயணம் என்ற இரண்டு நூல்களும் முக்கியமானவை, தென்னாட்டிலும் பல கியாதி பெற்ற அரசர்கள் இருந்தார்கள். அவர்களுடைய விருத்தாந்தங்கள் சிலவற்றை ஆங்காங்கு காணலாம். ஆனால் தக்க பக்க ஆதாரங்களைக் கொண்டும், நிகழ்சியுற்ற காரியங்களை குறித்தும் போதுமான அளவு சரித்திர ஆராய்ச்சிக்கு உகந்தனவாக எழுதப்படாதது ஒரு பெருங் குறையாம். தவிர இந்நூற்களுக்குப் போதுமான பெருமையோ, புகழோ, சான்றோ, பிரசுரமோ செய்யப் படாதது மற்றொரு பெருங்குறை. இது அப்படியிருக்க வடநாட்டிலே நடந்த இரு ஆரிய மன்னர் குடும்பங்களைப் பற்றி இதிகாசங்களெனும் மதப்பெருமை கொடுத்து எழுதிவைக்கப் பட்ட நூல்களுக்கு என்ன பெருமை என்ன மகத்துவம்?

இவைகளில் வடநாட்டாரின் நடையுடை பாவனை பழக்க வழக்கங்கள், சமுதாயம், சமயக் கோட்பாடு, ஆரியதர்மம், ஆச்சார அனுஷ்டானம் முதலியவைகளை அபரிமிதமாய் ஆங்காங்கு காணலாம். இவற்றில் ஆரியர் அல்லாத ஏனையோர் இவர்களையே தெய்வமாகக் கொண்டாடும்படி செய்துள்ளது உண்டே அதைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டியதாகும். இவ்விரு இதிகாசங்களையும் அவ்வக்காலத்தே உடனுக்குடன் எழுதப்பட்டனவாய் இருக்கமுடியாது. ஆரியர் அல்லாத மற்றையோர் தங்களுக்கு அடிமைப்பட்ட பின் தங்களிடம் பயந்து நடக்கவும், தங்கள் கொள்கைகளையும், மதத்தையும் பின்பற்றவும், ஏனையோர் தங்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறையையும் அதிகாரத்தால் காட்டாமல் மதப்பெயரால் நிலை

# பக்தியும், முக்தியும்

"வளன்"

அவர்கள் ஆனந்தமாக வந்தனர். 'தடார்' என்று மோதிய வுடன், ஒருவரை யொருவர் திரும்பிப் பார்த்தனர்!

அவர்களில் ஒன்று, கெண்டை மீன் கூட்டம். மற்றொன்று விரால் மீன்!

விரால் மீன் கோபம் பொங்க, அற்பர்களே! நில்லாதேயுங்கள்! என்னரும் தவத்தினது மகிமையை நீங்கள் அறியீர்கள் போலும்! இதோ............"

"ஐயா, மன்னிக்கவும்"

மன்னிப்பா? உங்களைச் சபிக்கிறே ர!

"கோபம் வேண்டாம் சுவாமி! வழியோடே வந்தோம்..."

விரால் மீன் பெருமிதத்துடன் மேலே வந்து, 'லபக்' என்று குமிழி விட்டு," என்னைப் பற்றிய உண்மைகளைப் பின்னர் அறிவீர்கள், என் தவமும், ஆடலும் பாடலும்..........."

ஓம்......ஓம்......ஓம் என்று நிஷ்டையில் அமர்ந்தது விரால் மீன், பரம பக்தரைப்போல்!

அவர்கள்—கெண்டை மீன்கள்—நிலைகுலையாதபடி, அவரையே பாாத்துக் கொண்டிருந்தனர்;

"சுவாமி!...பலி......பலி......நரபலி......இதோ......."

அவர்கள் பிரமித்து விட்டனர், கடவுளைக் கண்ட கபோதியைப் போல!

"கடவுள் உங்களில் ஒருவரை 'பெண்பலி' கேட்கிறார்! "அவள் மட்டும் நிற்கட்டும். மற்றவர்கள்........"

"சித்தம் சுவாமி"

அவள் இதயம் வெடித்துவிடும் போல இருந்தது!

கள்ள நடையுடன் மெல்ல மெல்ல அவள் அருகில் சென்றது, விரால் மீன்!

கண்ணே !......என் கண்ணே ........."

"சீ........"

"என்ன 'சீ'யா?......அடிமை......அதிலும் பெண்! என்னையா 'சீ' யென்ருய்? இதோபார்! உன் பெண்மையை என்ன செய்கிறேன் என்று."

"லபக்"? என்று பற்றியது, கெண்டை மீனை!

"ஐயோ......விடு. பக்தனைப் போல பசப்பு வார்த்தைகள் பேசி, ஆளை மயக்குகின்ற மோசக்காரா, விடு" என்று தொண்டை கிழிய கதறியது கெண்டை!

"என்ன, விடுவதற்கா? அதற்காகவா அங்கிருந்து இங்கு வந்து, இந்த ஆசிரமம்,......பக்த கோலம்......எல்லாம்......"

"ஐயோ! பக்தன் பக்தன் என்று, பாமர மக்களை ஏமாற்றி........"

"நானு ஏமாற்றினேன்?"

"இல்லை...'உன் வேஷமும், நடிப்பும், படிப்பும், பக்தியும்......முக்தியும்......எல்லாம்"

"ஆம். பக்த ஆசையிலே மோசம் இருப்பதை அறிய முடியாவிட்டால் அது யார் தவறு" என்று தன்னுடன் ஐக்கியமாக்கிக்கொண்டது!

---

## இளம் எழுத்தாளர்களுக்கு.........!

தமிழகத்தின் சில பகுதிகள் உங்களுடைய விறுவிறுப்பும், உண்மையை சீர்தூக்கி உணர்த்தும் எளிய தமிழ் நடை கட்டுரை, கவிதை, சிறு கதை, முதலியவைகளை ஏற்றுக்கொள்ள காத்திருக்கின்றன. சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படும்.

மூன்று பக்கங்களுக்கு மீருதவை!

# புரட்சி ஓங்கவேண்டும்.

[ பொள்ளாச்சி பாலு ]

அன்பு நிலவவேண்டும்—சாதி
அனைத்தும் ஒழியவேண்டும்!
இன்பவாழ்வு வேண்டும்—மேல்கீழ்
இருப்பதொழிய வேண்டும்!
கல்விநிறைய வேண்டும்—கோயில்
கற்கள் ஒழிய வேண்டும்!
செல்வம் தழைக்கவேண்டும்—மதமாம்
சிறுமை ஒழிய வேண்டும்!
அறிவு பெருக வேண்டும்—புராண
அடிமை யொழியவேண்டும்!
உறுதி மிகவும் வேண்டும்—பூநூல்
உடனே யொழிய வேண்டும்!
புரட்சி ஓங்க வேண்டும்—மோட்சப்
பொய்யர் ஒழிய வேண்டும்!
வறட்சி நீங்கவேண்டும்—மூட
வழக்கம் ஒழிய வேண்டும்! (அன்பு)

---


வெளிவருகிறது! பிரதிகளுக்கு முந்துங்கள்!!

## ★ மங்கிய நிலவு ★

[விருதை இராமசாமி]

★

மயிர்க் கூச்செறியும் வீர நிகழ்ச்சிகள் கொண்ட சமூக சீர்திருத்த நாடகம். களங்கமுள்ள நிலவு மங்கும் ஒளிவிடும். ஆனால் களங்கமற்ற திராவிடத்தில் மங்காது ஒளிவிடும் நிலவு எது?

★

விலை ரூ. 2—0—0

விபரங்களுக்கு:

**தமிழகம் பிரசுராலயம்,**
தெப்பக்குளம் P. O., திருச்சி.

நாட்டவே "அசைக்கினும் அசையா" வண்ணம் வேர் ஊன்றும் படியாகத் தங்கள் இனத்தாரின் வாழ்வுக்கு வழிதேடி வைக்கும் நோக்கத்தில் ஆரிய கவிஞர்கள் எழுதிய நூல்களாகும். ஒவ்வொரு இதிகாசமும் சுமார் 500, 1000 ஆண்டுகளுக்குப், பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டுமென ஊகிக்க வேண்டியிருக்கிறது.

இவற்றுள் பாரதப்போர் ராமாயணத்துக்கு முன்னே நிகழ்ந்ததாகவே இருக்கவேண்டும். பாரதக் கதையில் விவரிக்கப்பட்ட எதை எடுத்துக்கொண்டாலும் ராமாயண காலத்துக்கு முற்பட்ட அநாகரீகத்தையே காண்பிக்கின்றது. ஆரிய ரிஷிகளின் மிருகப் புணர்ச்சிகளும், பெண்களின் தவறான கற்பு ஒழுக்கங்களும், மன்னர்களின் குடியும் சூதாட்டமும் மிகுதியாய்க் காணலாம். அரசமன்றத்தில் பல மன்னர் முன்னிலையில் தங்கள் மைத்துனி, துரோபதையின் துகிலை உரிவது என்ன கேவலம்! ஒருவள் பலருக்குப் பெண்டாய் இருப்பதும், ஆண்களே தம்மனைவியரை ரிஷிகளுக்கு அனுப்பிக்கொடுத்து பிள்ளை வரம் பெற்றுவரச் செய்தும், இன்னும் பல மிருகத்தனமான செயல்களும் நிகழ்ந்தவைகளைக் கவனித்தால் பாரதம் ராமாயண காலத்திற்கு முற்பட்டதாகவே இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஆனால் அக்காலத்தில் கிருஷ்ணனின் சம்பந்தம் இருந்திருக்க முடியாது. ராமன் அவதாரத்துக்குப் பின்னே தான் கிருஷ்ணன் அவதாரம் என்பர். ஆகையால் வேதவியாசர் வெகு ஆண்டுகளுக்கு பின்னிட்டு—அதாவது ராமாவதாரத்திற்குப் பின்னிட்டு—பாரதத்தை எழுதி அதில் கிருஷ்ணனையும், கிருஷ்ணனால் கூறப்பட்ட பகவத்கீதையையும் நுழைத்து ஆரியதர்மத்தை ஆரியரல்லாதார் பின்பற்றி வழிபடவே பாரதத்தை எழுதியிருக்க வேண்டும்.

பாரதகாலத்து ஆரியர்களைவிட ராமாயணகாலத்து ஆரியர்கள் ஆச்சார அனுஷ்டானங்களிலும், பழக்க வழக்கங்களிலும் சீர்திருத்தங்கள் அடைந்தவராகப் புலனாகிறது. அத்தமிழர்களின் சிறந்த ஒழுக்கங்களைக் கண்டும், கல்வி கேள்விகளின் மேம்பட்ட நிலையைக் கண்டும் பொறாமை கொண்டு

தார்களும் தமிழர்களைப் போல் ஒழுகவேண்டும் என்பதை முன்னிட்டு நாளடைவில் பழையன கழிந்து புதியன கையாள முயன்றனர். பாரத காலத்திற்கும் ராமாயண காலத்திற்கும் இடையே சுமார் 1000 ஆண்டுகளாவது நீடித்திருக்கவேண்டும். வேதவியாசன் வேதியர்களை அதிகமாய் உயர்த்தியும், பிராமணனுக்கு தர்மம் கொடாவிட்டாலோ, நலம் தேடி வைக்காவிட்டாலோ, தீங்கிழைத்தாலோ ரௌரவாதி நரகத்திற்குப் போய்ச் சேரவேண்டுமென பயத்தை நுழைத்து தர்மோபதேசத்தைச் செய்திருக்கிறான். வால்மீகியோதான் எழுதிய ராமாயணத்தில், தன் வருணத்தார் தென்தேயத்தில் பிரவேசித்ததும், குடிபுக இடம் பெற்றதும், தன் இனத்தாருக்கு அரசப்பாதுகாப்பு ஏற்படுத்தியதும், அதற்காக ராமன் அரசியல் தூதனாகவும் அரசியல் போர் வீரனாகவும் ஹிட்லரைப் போல நாடு பிடிக்கும் முறையில் தெற்கு நோக்கிச் சென்றதையும் விவரித்துள்ளான். அதனாலே ஆரியச்சாரணனான ராமனை அவர்கள் அவதாரமெனக் கருதுவதும் பூசிப்பதும் இயற்கையே.

இந்துதேச சரித்திரத்தில் புராணங்கள் எதையும் கூறாமல் பாரதத்தையும் ராமாயணத்தையும் நுழைக்க வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சரித்திரத்திற்கும் இதிகாசங்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதைக் காட்டாமல் கிருஷ்ணாவதாரம், ராமாவதாரம், ராக்ஷச சம்காரம் என்று மதக்கூற்றைக் கூறி இருக்கிறது. பாரதம் வடநாட்டில் ஒரு அரசகுடும்பத்திற்குள்ளாக தங்கள் தங்கள் தாயகத்திற்காக கிளம்பிய பங்காளிப்போர். ஆகையால் அதைப்பற்றிய ஆராய்ச்சியோ, ஆரிய திராவிடக்கலப்பையோ நுழைந்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ராமன் தென்னிலங்கைக்கு வந்து ராவணனை வதை செய்த காரணத்தால் ராமாயணத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வது மிக மிக அவசியமாகும். ராமாயணத்தை பண்டிதர்களும் படிக்கலாம் மதப்பற்றுடைய பக்தர்களும் படிக்கலாம், பாமரரும் படிக்கலாம். மூலநூலான வால்மீகியின் கவித்திறமையை சமஸ்கிருத பண்டிதர்கள் படித்து ஆனந்தமடையலாம். மதப்பற்றுள்ள ஆரியர்

கள் மகாவிஷ்ணுவை வழிபடுபவர்கள். கடவுளின் அவதாரத்தை நம்புகிறவர்கள், மகாவிஷ்ணு இதுவரையில் பத்து அவதாரம் எடுத்துள்ளார் என்பவர்கள், ஒவ்வொரு அவதாரத்திலும் தங்கட்கு இடைஞ்சல் செய்விப்போரை அழித்து தங்கள் தருமத்தை நிலைநாட்டுகிறார் என்பார்கள். அவர்கள் மதத் தத்துவம் "அவனே, நான் நானே அவன்." என்ற விசிட்டாத் வைதத்தை மேற்கொள்பவர். உலகோருக்கு இவ்வித வைனவ சம்பிரதாயத்தைப் போதித்து மதமாற்றம் செய்து வந்திருக்கின்றார்கள்.

கவிநயத்தை எடுத்துக் கொண்டால் ராமாயணத்துக்கு மூல நூலாகிய வால்மீகியை ஆரியர் அபாரமாகப் போற்றுகின்றனர். உலகில் உள்ள எல்லா பாஷை களிலும் ராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டு இருப்பதை காணலாம். ஆங்காங்குள்ள சமூக நிலைமைக்குத் தக்கவாறு மாற்றியும் திருத்தியும், கதையை ஒட்டியும் வெட்டியும் செய்யப்பட்டு இருக்கின்றது. அவற்றுள் கம்பராமாயணமும் ஓர் முக்கிய நூலாகும். கம்பன் உலகக் கவிகளான ஷேக்ஸ்பியர், ஹோமர், காளிதாஸ் இவர்களுடன் ஒப்பிடக்கூடிய ஓர் சிறந்த கவி என்பதில் ஐயமில்லை. தன் மனோபாவத்தையும், கவி நயத்தையும், கற்பனாலங்காரத்தையும் வெளியிட கம்பனுக்கு ஓர் தக்க சமயம் வாய்த்தது. ஆரியர் கொடைகளுக்கு அடிமைப்பட்ட சடையப்ப வள்ளல். வள்ளளின் விருப்பப்படி கம்பன் ராமன் கதையை 12000, தமிழ் பாக்களால் செய்வித்தான். அதில் மதப்பற்றும் கவி நயமும் ததும்பும்படி தன் கவித்திறமையை காட்டிக்கொண்டான். மூலநூலாகிய வால்மீகியை பல விடங்களில் தழுவியும் சில விடங்களில் நாட்டுக்கொப்பனவாக திருத்தியும் உள்ளான். அதோடு முதல்நூலில் காணும் பல ஊழல்களையும் நகைக்கக் கூடிய நடைமுறைகளையும் களைந்துவிட்டு தமிழ் நாட்டிற்கு ஒப்பனவான நீதி நெறியையும், நாகரீகத்தையும், பழக்கவழக்கங்களையும் ஒட்டித் தமிழர்களின் மனதில் கவர்ச்சி உண்டாகும்படியாக அக்காவியத்தை அரங்கேற்று செய்வித்தான். அப்படிச் செய்யும்போதே "வையகம் தூற்றுமோ." என்ற உள்ளக் கிளர்ச்சி தோன்றாமலில்லை. கம்பன் இம்மொழி பெயர்ப்பை

எக்காரணம் கொண்டு செய்திருப்பினும் நம் நாட்டையும் மக்களையும் நாமே இகழும்படியும், நமது சுவாதீனத்தை இழக்கும்படியும் புறச்சமயத்தில் ஆர்வம் உண்டாகும்படியுமான மதப்பற்றுதலையும் செய்வித்துத் தமிழர்களின் மனப்போக்கை அடியோடு மாற்றி அவர்களின் நெறிமுறையைக் கெடுத்து நாட்டையே நசிக்கச் செய்துவிட்டான் ஆகவே கம்பனின் அட்டூழியத்தை சற்றும் எக்காலத்தும் மன்னிக்கத் தகாததாகும்.

கவித்திறத்தையோ, காவிய நயத்தையோ, மதப்பற்றையோ, ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, ஆரிய குலத்தில் தசரதன், மகனாய்த் தோன்றிய ராமன், நாட்டு சரித்திரத்தில் ஏனைய அரசரைப் போல் என்ன இடம் பெற்றுளான், என்ன இடம் பெறவேண்டும் என்பது பற்றி சரித்திர ஆராய்ச்சி செய்தல் அவசியம் ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து சுமார் 5000 ஆண்டுகளாகின்றன. பாரதம்300 ஆண்டுகளுக்குள் இந்திரபிரஸ்தத்தில் (டில்லி) நிகழ்ந்திருக்கவேண்டும், ராமாயணமோ அயோத்தியில் சுமார் 2500 ஆண்டுகளுக்குள் நடந்திருக்கவேண்டும். இடையே குறைந்தது 500 ஆண்டுகளாவது இருக்கவேண்டும். தவிர இக்கதைகளை அவ்வப்போதே எழுதியிருக்க முடியாது. ஆரிய மதத்தில் வேதியரின் ஊழல்களும் ஆதிக்கமும் பெருகியதால் புத்தமதம் பிறந்தது. அதைப் பரவவிடாமல் தடுக்கவும் ஆரியதர்மத்தை மறுமுறையும் நிலைநாட்டிக் கொள்ளவும் இக்கதைகளை உபயோகப்படுத்தி 500, 700 ஆண்டுகளுக்குப் பின்னே மதக்கிரந்தங்களாக வேதவியாசனும், வால்மீகியும் எழுதியிருக்கலாமெனத் தோன்றுகிறது. தமிழ் நாட்டிலே சைவமும் சமணமும் போட்டி போட்டுக்கொண்டிருந்த காலத்தில் சங்கராச்சாரியார் ஆதிசைவத்தை ஆரிய சைவமாக மாற்றி அத்துவைதத்தை உபதேசித்து வந்தகாலத்திலே, சேரசோழ பாண்டியர்கள் ஆரிய சைவத்தை பின்பற்றி கோவில்களையும் மடங்களையும் கட்டி வேதியரின் நன்மதிப்பைப் பெற்றனர். இன்றைக்கு சுமார் 1000 ஆண்டுகளிருக்கலாம். இக்காலத்தில் வடநாட்டுக் கதைகளையும் தர்மங்களையும் தென்னாட்டில் பரப்ப பாரத ராமாயண நூல்களை மொழி பெயர்த்தெழுத வேண்டிய அவசியம் பிறந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

இங்கே ராமகதையின் சரித்திர ஆராய்ச்சியை எடுத்துக் கொண்டிருப்பதால் அதில் கூறும் சம்பவங்களை ஆராய்ந்து துருவிப் பார்த்தால் குற்றமல்ல. நிகழ்ந்த இடங்களையும், நேர்ந்த சம்பவங்களையும், விளைந்த மாறுதல்களையும் உற்று நோக்கின் தசரதன் ஆரிய ரிஷிகளின் விருப்பப்படி தம் மக ராமனை, விற்பயிற்சி கொடுத்து, தென்னாட்டிற்கு அனுப்பித் தங்கள் குடிமக்கள் தெற்கே பரவுதற்குப் புதிய புதிய இடங்களைத் தேடி வரும்படியும், ஆங்காங்கு இராவண விரோதிகளின் நட்பைக்கொண்டு ராவணனை வதைத்து வரும்படியும் அனுப்பிவைத்ததே ஆகும். இதை ஒருவாறு ஆராய்ச்சி செய்ததின் பயனாக இனி கூறப்போகும் விஷயங்களால் சரித்திர உண்மை தெரியும். இவ்வித ஆராய்ச்சியில் சிலவற்றிற்கு ஆதாரங்கள் இருக்கலாம், சிலவற்றிற்கு காரணகாரியங்களே ஆதாரமாகக் கருதவேண்டியிருக்கும், சிலவற்றிற்கு மனித வர்க்கப் பாகுபாடும் அவரவர்கள் குறிக்கோளும் பொருந்தியனவாகயிருக்கும். ஆகையால் அவற்றையெல்லாம் சாவதானமாகவும் பொருமையாகவும் சிந்தித்துப் பார்த்து உண்மை யுணர்தல் நன்மை பயக்கும் என நம்புகிறேன்.

(தொடரும்)

நவீன முறையில்
விளம்பர டிசைன்கள்
சினிமா கலர் சிலேடுகள்
போட்டோ, லேண்டுஸ்கேப்போன்
கலர் பிளாக்குகளுக்கு
ஆழ்வார்
ஆர்டிஸ்ட்,
No.1. கொல்லமேட்டு தெரு, தெப்பக்குளம் P.O. திருச்சி.

# ★ சலிமா ★

"க. சுந்தரம்"

—:0:—

ஒரு பழைய குடிலின் மேற்கூறை உழைத்தும் கடன்பட்டுத் துடிக்கும் உழைப்பாளியின் உள்ளத்தைப்போல காற்றில் போராடிக்கொண்டிருந்தது. மினுக் மினுக்கென்று தன்னுடைய சக்தியற்ற நிலையில் போராடி எஞ்சிய ஒரு துளி எண்ணெயின் உதவியால் சமூகத்தறுதலை செல்வனைப்போல ஒளியை சிந்திக்கொண்டிருந்தது அகல்விளக்கு.

இடர்பட்டு மெலிந்திருந்தாலும் இளைஞனே எஃகுவைப் போலுள்ளம் வேண்டும் என்று பாடிக்கொண்டிருந்தான் ரஹீம். தனிமையிலே இன்பமென்று உணர்ந்தவனைப்போல் அதன் உண்மையை ரஸித்தவனாகக் காணப்பட்டான். நான்கைந்து உடைந்த பாண்டங்கள் ஒரு மூலையிலே காகிதக் குப்பை. அது அவனுடைய அறிவை வளர்க்கும் நூல்கள். இதற்கு நடுவிலே உடைந்த கயிற்றுக்கட்டில். அதன்மேலிருந்தவனை விரட்டியடித்தது, பொத்தல் குடிசை வழியாக புகுந்த மழைநீர். வறுமை வாட்ட ஏழ்மை இறுகத் தழுவவாழும் ஒருவனுக்கு நிம்மதி எப்படியிருக்கமுடியும்?

கீரல்பல ஏற்பட்டும் சட்டத்தைவிட்டு பெயராமல் கண்ணாடிப்படத்தில் அவனுடைய கல்லூரிப் படிப்பின் குதூகலம் மறைந்து வெறும் காகித அளவிலே காட்சி தந்தது உபயோகமற்ற கோவில் சிலையைப்போல.

விளக்கும் புகைந்தொழிந்தது. வெறுப்போடு எங்கோ புறப்பட்டான் ரஹீம். அவனது காலணியின் ஒலி துணைவர இரவின் சூன்யத்தைக் கிழித்து நடந்தான். வேலை தேடி அலுத்த அவனது கால்கள் அவனுடைய ஏமாற்றத்தைப்பற்றியும், உலக நிலைமைப்பற்றியும் விரிவாக சிந்தனை செய்யத் தூண்டியிருக்கவேண்டும். களைத்துப்போன அவன் காட்டாற்றுக்கரைமீது அமர்ந்தான்.

நிலவு ஒளி சிந்திக்கொண்டிருந்தது. சிறு சிறு கற்களை வன் கைகள் வீசிக்கொண்டிருந்தன.

களுக்.....................களுக்... ........!

ஆகாகா............ இப்படித்தானே அவளும் சிரிப்பாள். சலிமா என்னுயிரே! ஹூம்......... ஏழைக்கு எப்பொழுதும் ஏமாற்றந்தானே! நீ பணக்காரி உன்னை கூறி என்ன பயன்? சமுதாய அமைப்பு.

அன்று, பரந்துகிடக்கும் நீலவானம் பசுமை மாருத நன்னிலங்கள் பூத்துச் சிரிக்கும் வண்ணமலர்கள். ஓயாது பாடிக்கொண்டிருக்கும் ஆற்றுவெள்ளம் இவையெல்லாம் உன்னை என்னிதயத்தில் குடிபுகச் செய்த சூழ்ச்சியா? ஆனால் இன்று இவையெல்லாம் என்னை பச்சாதாபம் சிந்தநோக்கி ஏளனச் சிரிப்பின் எதிரொலியை பாய்ச்சி என் உள்ளத்தைகூறுபோடுகின்றனவே!

குழந்தைப்பருவம் தொட்டு என் கூடவேவளர்ந்த ஏழ்மை, இன்னும் கொஞ்சிக்கொண்டேதானிருக்கிறதென்ருல் நான் ஏதாவது செய்ய முடியுமா?

சலிமா உனக்குமெனக்கும் ஏற்பட்டது காதலா? அப்படியானல் எனக்குமட்டும் ஏன் ஏமாற்றம்? வாழ்வில் வீழ்ச்சி, வறுமையில் வாதை நிறைவேருத காதலால் சோகம் சொட்டும் நீர்த்துளிகள். முடியாது.........முடியாது! உன்னை நான் கண்டிருக்கவே முடியாது!! தூக்கம் பிடியாத இரவிலே தோன்றிய கனவு உன் சாயல் நீ யார்? நான் யார்? உள்ளமொடிந்து போன எனக்கும் ஒய்யார வாழ்விலே உருளும் உனக்கும் தொடர்பா? நீ சீமாட்டி. நான் பஞ்சை, நெஞ்சை அள்ளும் காதலிலே நான் துடிப்பதாக பிறர் கூறக் கேட்டாலும் நீ அனுதாபப்படுவாய். ஆனல் உன் வர்க்கம் பணக்கார அகம்பாவ மேம்பாடுற்ற மனநிலே தாங்கிய வர்க்கம் என்னைத்தடை செய்யும். பிறகு நான் வாழமுடியாது.

காதலென்று பிதற்ற எனக்குக் கற்றுக்கொடுத்தது உன் இளமையின் மலர்ச்சி. கண்ணீர்விட்டு கதறு என்று கூறுகிறது

ஏழ்மை. வாய்விட்டழுகிறேன் வருத்தம் ஒழிவதில்லை. நான் பஞ்சைதான் அதற்காக பெருமகிழ்வடைகிறேன். ஆனாலும் மீண்டும், மீண்டும் சோதிக்கப்படுகிறேன். இந்நிலையால் மக்கள் சமூகம் வருந்திச் சாவதை விலக்க வகை தேடிக்கொண்டிருக் கின்றேன்.

எனது பாட்டன், தந்தை பணக்கார சமூகத்தை சேர்ந்த வர்கள்தான். நான் மட்டும்............மனித உள்ளமும் பச்சா தாபமும் உள்ள எவனும்தான் செல்வவானென்று சொல்லிக் கொள்ள முடியுமா? இழந்தவை நீங்க, இருந்தவையெல்லாம் கலாசாலையின் அர்த்தமற்ற படிப்பிற்காக ஒழிந்துவிட்டன. ஆயினும் ஒரு வேலை கிட்டவேண்டுமே! இளம் பருவத்தால் திரட்சிபெற்ற என் கால்கள் இனி வேலை தேடுவதற்காக தம் தொழிலை செய்ய களைப்புகொண்டுவிட்டன.

மணச்சடங்கு நடக்கும் அவ்வேளையில்கூட திறையிட்டு மறைத்து பெண்குலத்தை பேரம் பேசி நாணத்தை போக்கி நாட்டுக்கு முன்னேற்ற பாதையில் ஊக்கத் திறமற்ற சமூகத்தி லே காதல் கொண்டோமென்று கவலையறச் சொல்லமுடியுமா? எனக்குறியவன் சலிமா என்றால் என் பெரும்பாலோர் சீறுகின் றனர். ஒரே பள்ளியில் பயின்ற நண்பன் நீதிபதியாக மாறி தன்னுடைய சட்டத் திறமையை தன் எளிய நண்பனின்மேல் தீட்டுவதுபோல சலீமா குடும்ப கௌரவம் என்றதின் பேரால் என்மேலேயே ஏமாற்றத்தை பொருத்திக்கொண்டிருக்கின்றாள் நான் இறந்துகொண்டிருக்கின்றேன். அவளின் சூதறியா எழில் முகத்தில் சுருக்கங்கள் வீழ்ந்து சிரிக்கின்ற அவளின் கனிக் கன்னத்தில் என் கருத்துப் படும்பொழுதெல்லாம் புத்தம் புதிய சக்தியை உண்டாக்கும் சலீமா கோடையில் லேசாகப் பொழி யும் சிறு தூரலைப்போன்று இன்பத்தை ஊட்டி இன்று தவிக்க விட்டுவிட்டாள். நான் தனிமையில் சாகிறேன். இனிமையில் வேகின்றாள் சலீமா. அவள் நினைத்துப் பார்த்திருந்தால் நெஞ்சை வெடிக்கச் செய்திருக்கும். அவள் ஒரு விசிறியைப் போல! தன்னுரிமையற்றுத் தவிக்கும் தையல். அவள்மே லென்ன குற்றம். உழைத்தும் உலுத்துப்போகும் உழைப் பாளியின் வாழ்வின் நலனுக்காக நான் உதவி செய்தது தவறா?

மன நிலையை சொல்லாமல் புழுங்கும்மலைத் தோளரின் மௌனத்தை சிதைத்து அவர்களுக்கு நான் தலைவனென்று செயலாற்றியது தவறு? 'தனியொருவனுக் குணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்'. இதன் பொருளைத் தழுவி நடைமுறைக்குக் கொண்டுவந்ததுதான் குற்றமா? அப்பப்பா...... அடித்து உடைபெற்ற மண்டையின் காயம்கூட இன்னும் மாறவில்லை.

சிந்தனை உச்சநிலை பெரும்பொழுது சூன்யம் நிறைந்த அடிவானத்தை ஆதரவற்று காணும்தோறும் என்னென்ன கற்பனைகள் உதயமாகின்றன.

சட்டத்தின் கொடுமையை நினைப்பதா? சதா என்னுள்ளத்தில் நடமிடும் சலீமாவை எண்ணி ஏங்குவதா? குறைந்தகால அளவிற்குள் என்னென்ன மாறுதல்கள்?

சலீமா என் உணர்வே! பொதுநலனுக்குழைத்த என்னைப் பொல்லாங்கு பேசி உன்னை விட்டுப்பிரித்துவிட்டார்கள். இனி நீயும் நானும் சேரமுடியாது! என்றாவதொருநாள் தேடிவருவேன் உன் வீட்டிற்கு. உன் குரல் இசை எழுப்பும். உன் முகம் திரைக்குப் பின்னே புதைந்திருக்கும். நான் நிராசையோடு திரும்பும்பொழுது எதிர்படும் உன் குழந்தைகள் உன்னை அப்படியே பிரதிபலிக்கும். ஆசையோடு அணைக்கப்போவேன், அவைகள் இந்த பஞ்சையைக் கண்டு அலறி நடுங்கும்.

அப்பப்பா............ ஏழ்மை பொல்லாததுதான், அணைத்துக்கொள்ள ஆள்மட்டுமிருந்தால் தயை காட்டப்படும். சில நாட்களில் நான் செயலற்றுப்போவேன். என் மனம் பலம் குன்றியதைப்போல என் உடலும் குன்றிவிடும். நடக்கவியலாமல் எங்கோ வீழ்ந்துகிடப்பேன்.

பாவம் என்னை அனாதை என்று யாரேனும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லலாம். அனுமதிக்கப்பட்ட நான் மருந்துண்டு அயர்ந்து கிடப்பேன். அந்த டாக்டர் ஆமாம் உன் கணவன் தனது சோதனைக் கருவியால் என்னுடைய உள்ளத்தை

வேடுருவ நினைப்பான்.' ஆனால் உன்னுடைய உருவம் பதிந்திருப்பதை அவன் கண்கள் காணும் சக்தியை இழந்துவிடும். இரண்டொரு நினைவிலிருந்த மருந்துக் குறிப்பை எழுதித்தள்ளி விட்டு உன் தளிர் கரங்கள் தயாரித்த தேயிலையை அருந்தச் சென்றுவிடுவான்.

கொலைக்களத்தின் அமைதியைப்போல இளம் விதவையின் தனிமையைப்போல உன் உள்ளம் சோர்வுற்றுக் கிடக்கும் பசையற்ற அந்த இருட்டில் உன் உருவைக்கண்டு தாவிப்பிடிக்க ஓடுவேன். ஆனால் நீ இருந்தால்தானே! கண்ணாடி சன்னலில் மோதிக்கொண்டு கற்றறையில் தலை அடிபட வாழ்விலிருந்து விடைபெற்றுக்கொள்வேன்.

மறுதினம் பைத்தியம் இ ுதுவிட்டானென்று கூறி பதறுமல் உணவருந்திக்கொண்டிருப்பான் சலிமாவின் கணவனாகிய அந்த டாக்டர் மகமதியன் என்று அவன் உதடுகள் முணகும். அல்லாஹ்........என்று அடைந்திருந்த சோகத்தை உடைத்து நீண்ட ஏக்கம் கலந்த பெருமூச்சு விடுவாள் சலிமா.

பீபீ........... தூக்கம் வருகிறது, படுக்கை போட்டாயா? என்று கொட்டாவி விடுவான் அந்த டாக்டர். வெளிப்புறத்து சன்னல் வெளியெ விளக்கு வெளிச்சம் தென்படும் சலிமாவின் கண்கள் தூரத்தில் போய்க்கொண்டிருக்கும் என் ஜனசாவை (சவப்பெட்டியை கண்டுபிடித்துவிடும்).

நான் சொன்னேனே பீபீ அந்த ரஹீம் என்று ஒரு பைத்தியக்காரன் அவனுடைய சவப்பெட்டிதான் இது என்பான். என் உயிரே! ஐயோ........ என்று அவள் உள்ளம் அலறும், அவள் வாய் அடைத்துப்போகும், கண்கள் மின் ப ௨ ( வ' களாக மாறிவிடும்.

பிறகு கணவனருகே துயல முயற்சி செய்வாள்சலிமா. கன்னத்தை வருடிக்கொண்டிருப்பான் அவளின் கணவன். கனவு கண்டு பிதற்றுவாள் சலிமா. அஜீரணம் என்று மருந்தைத் தேடுவான் டாக்டர். அவனுடைய அறியாமைக்காக

லேசாக சிரித்துக்கொண்டிருப்பாள். கண்களில் நீர் மல்கிக் கொண்டிருக்கும்.

பீபீ அதிக உஷ்ணமென்று இரண்டொரு மாத்திரைகளை நீரில் கரைத்து குடிக்கச் செய்வான். அவளுடைய நடுங்கும் கைகளை நாடிபார்த்து நரம்புத்தளர்ச்சி என்று முடிவுகட்டி விடுவான் அந்த டாக்டர்.

நெருங்கிவரும் சவப்பெட்டியை ஏழை உழைப்பாளிகள் வருத்தத்தோடு தூக்கிச்செல்வார்கள்.

வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் டாக்டர் முஸ்லிம் ஆசாரத்தோடு கைகுட்டையை தலையில் போட்டு இரண்டொரு மறந்துவிட்ட மந்திரங்களை ஒருவகையாகச் சொல்லிமுடிப்பான்.

சிலையாக தோன்றிக்கொண்டிருப்பாள் சலிமா.

காதல் முடிந்துவிடும். என் சமாதியை பார்க்கத் துடி துடித்துக்கொண்டிருப்பாள்.

சின்னஞ் சிறிய மீனை பெரிய மீன் விழுங்கியது. இப்படித் தானே மதமென்ற மூட நம்பிக்கையால் மக்களின் உழைப்பு முதல் உள்ளம்வரை விழுங்கப்படுகிறது ஆரியத்தால்! என்று தன்னுடைய சிந்தனையை சிதைத்துகாட்டாற்றுக் கரையை விட்டு குடிசையடைந்தான். அவனுக்கு குளிர் காய்ச்சல் துவக்கிவிட்டது. நடுக்கம் அவன் பற்களை போர் தொடுக்கச் சொல்லிற்று. ஏழை முக்கினலும் முனகினலும் யார் கேட்க இருக்கிருர்கள். இரண்டு மூன்று ரொட்டித்துண்டுகள் சிதறிக்கிடந்தன. அரிசியை வாங்கமுடியாத காலத்தில் அவன் காய்ந்த அந்த ரொட்டிகளைத்தான் உண்பது வழக்கம். பசியால் ஒட்டி உலர்ந்த அவனுடைய நாய் அவனையும் ரொட்டி யையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தது. காய்ச்சலால் தள்ளாடும் தன் நண்பனைக்கண்டு துயரம் தாளமாட்டாமல் கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்தது அந்த நாய்.

ஷேர்! போ......போ சலீமாவைக் கூட்டிவா என்றான் ரஹீம். அதை புரிந்துகொண்டதைப்போல ஓடியது நாய். நினைவிழந்து ஓட்டைக் கட்டிலில் படுத்துவிட்டான் ரஹீம்.

தூக்கம் வராமல் தோட்டத்தின் கேணிமீது உட்கார்ந்து என்னமோ சிந்தித்துக்கொண்டிருந்தாள் சலீமா. ஷேர் அவளுடைய புடவைத் தலைப்பை பற்றி இழுத்து முன்னால் ஓடிக் காட்டியது. சால்வையை போர்த்திக்கொண்டு உறங்கிகிடந்த வீட்டினரைப்பற்றி கவலையே கொள்ளாது ஓட்டமும் நடையுமாக ரஹீமைக் காண வந்துசேர்ந்தாள்.

கடும் காற்று குடிசையோடு போராடியது. சலீமா, சலீமா என்று கதறிக்கொண்டிருந்தான் ரஹீம். ரஹீம், ரஹீம் என் உயிரோவியமே என்று அணைத்துக்கொண்டாள் சலீமா. அவனது நாடி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. சிரித்துக்கொண்டு உட்கார முயன்றான் முடியவில்லை. என் சேவை, மக்களுக்காக செய்தவை புதைவுபடாதவை, என் காதல் என்னோடு புதைவுபடும். என் படிப்பும் அதனோடு பிணைந்த என்னைப்பற்றிய உன் நினைவும் நீ வாழுமட்டும் நிலைத்து நிற்கும்.

அல்லாவின் ஆசி என்றும் நிலவட்டும். சலீமா! இறக்கப் போகும் என்மேல் ஒரு சகோதரியின் வெடிக்கும் உள்ளத்திலிருந்து வேதனை கலந்த குரலொலியில் சிறிது நேரம் அழுகிறேன் என்று ஒத்துக்கொள். ஆம் இறக்க ஆசைப்படுகிறேன் நான் ஒரு சக்தியற்ற கோழையைப்போல.

இறக்கும் என்னுடைய இறுதி வேண்டுகோள். உன் அன்புள்ளத்தின் பிணைப்பில் நான் மாறுபடாது அழகிய மணிக் கண்களில் நான் என்றுமே தோற்ற உன்னை எனக்குத்தா என்று ஆண்டவனை கேட்டுக்கொள்ளுகிறேன். அல்லாஹ்...... என்று கூறிய ரஹீமை இடைமறுத்து நீ தனியே இருக்க முயலுகிறாய், பணக்கார சமூகத்தை எதிர்ப்பதாக கூறிச் செயலாற்றுகிறாய். நீயே இவர்களின் முகத்திலே விழிப்பதில்லை என்று உறுதிகொள்கிறாய். ஆனால் ......?

(அடுத்த இதழில் முடியும்)

**விமர்சனம்:**

# வேலைக்காரி

—o—

மக்கள் இதயத்தைப் பண்படுத்தாமல் என்னதான் முன்னேற்றக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தாலும் அவைகள் அலியை அந்தப்புரத்துக்கழைத்துச் செல்லும் அழகியின் நிலை தான் அடையும். பாடம் நன்றாகச் சொல்லிக் கொடுத்தால் மட்டும் போதாது. படிப்பவர்களுக்கும் படிப்பில் அக்கறை உண்டாக்கவேண்டும். அதேமாதிரிதான் முன்னேற்றத்துக்கு வழிகாண்பிப்போரும், முன்னேறவேண்டும் என்ற கருத்தை மக்கள் மனதில் பதியவைக்கவேண்டும்.

நாடகமேடை மக்கள் மனதைப் பண்படுத்தும் உலைக்களங்களிலே ஒன்று. நடிக்கப்படும் எந்த நாடகத்தின் கருத்தும் பார்ப்போர் இதயங்களின் அடிப்பாகத்தில் (sub conscience) போய்ப்படியும். நிலத்தைப் பண்படுத்தியவுடன் விதைத்தால் செழிப்பான பயிரைக் காண முடிவது போல திருந்திய உள்ளங்களுக்கு முன்னேறும் வழி காண்பித்தால் எளிதில் பலன் காணலாம். இதுவரை காற்று தீயின் பக்கமாக அடித்து சூழ்நிலையைப் பாழாக்குவதுபோல, நடிகர்கள் புராணம், பழமை, இவைகளையே நடித்து மக்களின் இதயத்தில் அறியாமையை பரப்பிவிட்டனர். இப்போது காற்று பூங்காவின் வழியே வீசுகிறது. வீசுங்காற்று பேய்க் காற்றாயிருந்தால் பூங்காவையே அழித்துவிடும் குளிர் தென்றலாயிருக்கவேண்டும். அப்போதுதான் மணத்தை நுகர்ந்து மகிழ்ச்சி பெறலாம். அப்படிப்பட்ட வேலையைத்தான் அண்ணாவின் பேனா வேலைக்காரி உருவத்தில் தருகிறது, தஞ்சை ராமநாதன் செட்டியார் ஹாலில்!

தூரதேசங்களுக்குச் சென்று தந்தையைக் காப்பாற்ற மார் ஓடியப்பாடுபடும் ஆனந்தன் திரும்பி வரும்போது வேதாச்சல முதலியாரிடம் பட்ட கடனுக்காகத் தொல்லை

பொறுக்கமுடியாமல் மானத்திற்கஞ்சி மரக்கிளையிலே பிணமாகத்தொங்கும் தன் தந்தையைக் காண்கிறான். வேதாச்சல முதலியாரின் உயிரைப்போக்கிப் பழிக்குப்பழிவாங்க எண்ணும் ஆனந்தனுக்கு உலக இயல்பு தெரிந்த மணி வேதாச்சல முதலியாரை உயிரோடு வாட்டி வாட்டி வதைத்து அணுவணுவாகச் சித்திரவதை செய்வதுதான் சிறந்த முறை என வழிகாட்டுகிறான்.

மணியின் துணையினால், வேதாச்சல முதலியாரின் ஜாதித்திமிரையும், பணத்திமிரையும் ஒடுக்கி, வாழ்க்கையையே அநுபவிக்கமுடியாமல் கடைசியில் தற்கொலை செய்துகொள்ளத் துணியும் அளவுக்கு வதைத்து கடைசியில் திருத்துகிறான். ஆனந்தன் வேதாச்சல முதலியார் மகன் சரசாவைத்தன் மனைவியாகப் பெற்று அவளுடைய ஆணவத்தையும் அகங்காரத்தையும் அடக்கி நல்வழிப்படுத்துகிறான். தன் வீட்டு வேலைக்காரி அமிர்தத்தின்மேல் கொண்ட காதலுக்காகச் சொத்து, சுகம் அத்தனையும் தியாகஞ்செய்து வீட்டைவிட்டு வெளியேறி, தன் தகப்பனார் சூழ்ச்சியினால் தன் காதலி அமிர்தமும் அவள் பெற்றோரும் ஊரைவிட்டே விரட்டப்பட்டது கண்டு மனமொடிந்து மனச்சாந்திக்காக ஹரிஹர கோஷ் ஆசிரமத்திலே சேர்ந்த வேதாச்சல முதலியார் மகன் மூர்த்தி, ஆசிரமத்தில் நடக்கும் ஆபாசங்களைப் பொறுக்காமல் ஹரிஹர கோஷை கொலைசெய்து சிறைக்குச் செல்லவே, அவன் கட்சி வக்கீலாக தானே தோன்றி அவனை விடுவித்து அமிர்தத்துடன் இணைக்கிறான் ஆனந்தன். இதுதான் கதையின் சாரம்.

நாடகம் நல்ல முறையில் நடக்கிறது. பாலு முதலியார் சீன்களில் விறுவிறுப்பே இல்லை. மனஞ் சலித்துப்போய்விடுகிறது. பார் டான்ஸ், உழவன் பாட்டு இவைகள் மெச்சத்தக்கவை. நல்ல கருத்துக்கள் நிறைந்த உடுமலை நாராயணக்கவியின் பாடல்கள் தோழர் சிவசூரியன் குரலில் நன்கு பரிமளிக்கின்றன. இந்தமாதிரி நாடகங்களை துணிவாக நடிக்க முன்வந்த தோழர் K R ராமசாமிக்கு தமிழகத்தின் வணக்கம் பல!

முக்கிய கதாபாத்திரமான ஆனந்தன் வேஷம் போடும் தோழர் நடேசன் நாடகத்தின் நோக்கமே தெரியாமல் நடிக்கி

ளூர். அவர் பாகம் மக்களை சிரிக்கவைப்பதற்கல்ல, சிந்திக்க வைப்பதற்கு. எந்தவித உணர்ச்சியையும் அவர் நடிப்பில் காணப்படவே இல்லை. வெறுங் கேலிக்கூத்தாக முடிகிறது.

மணி வேஷம்போடும் தக்ஷிணாமூர்த்தி தன்னால் இயன்ற வரை நன்றாக நடிக்கிறார். "ஓர் இரவு" நாடகத்தில் இவர் "காமிடியனாக" வந்ததால் இவரைப் பார்த்தவுடனே பார்ப் போர் சிரிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். இன்னும் இயற்கை யாகவும், கெம்பீரமாகவும், உயர்ந்த முறையிலும் இவர் நடிக்க வேண்டும். "அனுவிலாசந்தான்" என்ற பாட்டை இவர் பாடுவது அர்த்தமற்றது.

மூர்த்தி வேஷம் போடும் தோழர் கிருஷ்ணன் பார்ப் போரைச் சிரிக்கவைப்பதுதான் தன் வேலை என்பதை மறந்து அவர் பாகத்தை உணர்ந்து நடிக்கவேண்டும்.

வேதாச்சல முதலியாராகத் தோன்றும் தோழர் கருணா கரன் நடிப்பில் ஜாதித்திமிரோ, பணத்திமிரோ, கெடுக்கும புத்தியோ துளிக்கூட இல்லை. வெறுங் கோமாளித்தனந்தான் காணப்படுகிறது.

வேலைக்காரியாக தோழர் மணி நன்றாகத்தான் நடிக்கிறார். ஆனால் அவர் உருவம் அந்தப் பாகத்துக்கு பொருத்தமாயில்லை. தோழியர் நாகரெத்தினமே நன்றாக நடிக்கும்போது ஏன் இவர் நடிக்கவேண்டும் என்பது நமக்குப் புரியவில்லை.

மடிப்பு குலையாத தலைப்பாகை, கோட்டு, அடிக்கடி துடைத்துப்போடும் கண்ணாடி இவைகளுடன் தோன்றும் புதுமாதிரி பைத்தியமான பாலுமுதலி வேஷம் போடும் தோழர் பக்கிரிசாமி ஒருமுறை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக் குப்போய்ப் பார்த்துவிட்டுவந்து நடித்தால் நன்றாக இருக்கும்.

அமிர்தத்தின் தந்தையாக நடிக்கும் தோழர் சிவசூரியன் நடிப்பு ஜோர். தாயாக நடிக்கும் தோழர் லட்சுமீபதியும் நன் றாகவே நடிக்கிறார்.

சென்னை-600 096.



ஹரிஹர கோஷாக நடிக்கும் தோழர், சரசுவாக நடிக்கும் தோழியர் இருவரும் (இருவர் பெயரும் தெரியவில்லை). மிக வும் இயற்கையாகவும் பொருத்தமாகவும் நடிக்கிறார்கள்.

மற்றபடி சீன் அமைப்போர், பின்னணி வாத்தியக்காரர் கள் நன்றாக ஒத்துழைக்கிறார்கள். பாடப்படும் பாட்டுக்களை எல்லோரும் கேட்கும்படி சற்று அடக்கி அடிக்கவேண்டும் என தபேலாக்காரரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாடகத்தை நிர்வகிக்கும் தோழர்கள், பொன்னுச்சாமியும், எத்திராஜுவும் இந்தக் குறைகளைக் கவனித்து திருத்தவேண் டும். என்ன குறை இருந்தாலும் பார்ப்போர் எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பு தோன்றுவதே இல்லை.

"பணமிருந்தால் தங்கத்திலே அரிசி சமைத்து, வைர வறுவலும், கோமேதகக் கூட்டும், மரகதப் பச்சடியும், பாய சத்திலே கெம்புங் கலந்து சாப்பிட முடியுமா?" சீமான் உல கிற்கு ஒரு சாட்டை.

"நீங்கள் தர்மப் பிரபுக்களாவதற்கு எங்களைப்போல சிலர் தரித்திரப் பசங்களாக இருக்கவேண்டுமா?" ஏழ்மையை ஒழிக்க முயலாமல் ஏழைகளுக்கு சேவை செய்கிறோம் எனச் சொல்லும் பித்தர்களுக்கு ஒரு சூடு!

"நானென்ன வேதாந்தியா? அவள்தான் மணிமே கலையா?" அறிவாளி நாடகமெழுதினால் எப்படியிருக்கும் என் பதற்கு ஒரு எடுத்துக்காட்டு!

"வெட்டிவிட்டால் போதாது, உயிரோடு வாட்டி வாட்டி வதைக்கவேண்டும்", "வெந்த புண்ணிலே வேல்" "பாம்பு கடிக்கவேண்டும், ஆனால் சாகக்கூடாது", கத்தியின்றி இரத்த மின்றி வரும் யுத்தமல்ல, புத்தியினால் பழி வாங்கும் முறை!

போய்த்தான் பாருங்கள், மறுபடியும் மறுபடியும் பார்க்கத் தூண்டும் மகா ஜாலக்காரி அந்த வேலைக்காரி. சிரித்து சித் திரவதை செய்யும் சிங்காரி, சரசத்துக்கு அதிகாரி!

புதிதாக அமெரிக்கா போன்ற
இடங்களிலிருந்து இறக்கு
மதியாகியிருக்கும் உயர்ந்த, ரக
பவுண்டன் பிளாஸ்ட்டிக்கால்
செய்யப்பட்ட சாமான்கள்
ஹண்ட லியில் மர்
பிஸ்கெட் முதலியனவும்.
மற்றும் எல்லாவித ஸ்டேஷனரி,
கட்லரி, கிளாஸ் வேர்சமான்களும்
விலை சகாயமாய் கிடைக்கும்.

★

# C. P. GENERAL STORE

NO. 42, NORTH CHITIRAI STREET,

MADURA.

அரிய கருத்துக்கள் நிறைந்த அறிவுக்குப்
பொருத்தமான நாடகம் !

★

தஞ்சையில் 12—2—47 முதல்
திரு. சி. என். அண்ணாதுரை எம். ஏ. எழுதிய

# வேலைக்காரி

4—மாதங்களாக தினசரி நடைபெறுகிறது.

★

உரிமையாளர் : **K. R. ராமசாமி**

பாடல்கள் : உடுமலை—**நாராயணக் கவி**

நாடக அமைப்பு : **M. S. முத்து கிருஷ்ணன்**

சபை அமைப்பு : **T. P. பொன்னுசாமி**

நிர்வாகி: **P. U. ஏத்திராஜுலு**

தேர்ச்சி பெற்ற நடிகர்கள் நடித்துச்
சிறப்பிக்கிறார்கள்.

**பல்லாயிர மக்கள்**
**பார்த்து மகிழ்கிறார்கள்**

## உரையூர்

# எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர் புடவைகள், 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்!!
100, 80, நெ. நூலில் தயார் செய்யப்பட்டவை உத்தரவாதமுள்ள சாயம் உறுதியான-உடை, சுத்தமான-சரிகை உயர்தரமான ரகங்கள், நாணயமான விலைகள்.

# S. M. S. R. பாலசுந்தரம்,

கைத்தறி ஜவுளி வியாபாரம்,
**43, பஞ்சவர்ண ஸ்வாமீ கோவில் தெரு, உறையூர் P. O.**
**திருச்சினாப்பள்ளி.**




A. G.
ஷேக் உசேன் &
பிரதர்ஸ்,
பீடி & சுருட்டு
வியாபாரம்,
ஸமஸ்பிரான் தெரு
திருச்சினாப்பள்ளி.

சிலோன், சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் இந்தியா ஏஜண்டுகள் தேவை

சோல் ஏஜண்டுகள்

M. K.
அப்துல் ஹமீது,
ஹமீதியா சீப்
ஸ்டோர்பஜார்ஸ்ரீட்
வவுனியா சிலோன்

M வேலு ஆசாரியார்
நெ, 151, பஜார்
ஸ்ரீட், அப்புதலை
சிலோன்.



# 5 உண்மைகள்!

**1 குரு மருந்துகள்**

ஆங்கிலம்—தமிழ் முறை கலந்தது. எல்லா சீதோஷ்ண நிலைமைக்கும் ஏற்ற பக்குவம்.

**2 குரு மருந்துகளின்**

குணங்களை, லண்டன், அமெரிக்க கெமிகல் சொஸைட்டியாரும் கூட ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

**3 குரு மருந்துகளில்**

பிரதம தயாரிப்புகள்.

| | |
|---|---|
| குரு தைலம் | 1-8-0 |
| குரு பற்போடி | 0-5-0 |

**4 குரு மருந்துகளே**

குடும்ப—பொக்கிஷம் குழந்தைகள் சஞ்சீவி

**5 குரு மருந்துகளை**

உங்கள் ஊர் மருந்து ஷாப் வியாபாரிகளிடம் கேளுங்கள்

கிடைக்காவிட்டால்

விவரங்களுக்கு

டாக்டர் **ஏ. மதுரம் சன்ஸ்**

குரு மருந்து சாலை,

திருச்சிராப்பள்ளி

# எதிர்பாருங்கள் !

தமிழ்ப்பட உலகிலே பகுத்தறிவுப் பகலவன்
ஒளிவீச புதுமைக் கருத்துக்கள் மிளிரும்
புரட்சிகரமான உரையாடல்கள் நிறைந்த
உன்னதப் புராணச் சித்திரம் !

# 'இந்திர குமாரி'

திறமை மிக்கப் பல புது நடிக மணிகள் நடிப்பது.

[அருட் கடவுள் அம்பலத்தரசனையே அடக்கியாள எண்ணிய அசுரத் தலைவனை வென்று அமரார்களைக் காப்பாற்றிய இளவலை இல்லறத் துணைவராய்க் கொண்ட இந்திர குமாரியின் இதிகாசக் கதை.]

திரைக்கதை—வசனம் :
**S. T. S. சுந்தரம்**
(நிலவழகன்)

பாடல்கள் :
திண்டுக்கல்
**A. V. சுப்பையாக் கவிஞர்.**

தயாரிப்பவர் :
**Y. பங்கராஜு**

விபரங்களுக்கு

## தி லிட்டில் பிளவர் பிக்சர்ஸ்

மேரீஸ் தோப்பு — தெப்பக்குளம்

திருச்சி.




Edited & Published By S. M. SANJEEVI RAJU,
82 Va-appattarai Tep. P. O., Trichinopoly and Printed by
S. KRISHNASWAMY M.A., at Kalyan Press, Madura Road,
Trichinopoly.